# தமிழ்

# உகரம்

## இரண்டாம் பருவம்

## விடைகள்

# பாடம் – 17

## 17.2 படிப்போம்

### பயிற்சிகள்

### (அ) விடை காண்போம் (பக்கம் எண்: 4)

1. கீழடி தமிழ்நாட்டிலுள்ள சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ளது.
2. கீழடியில் அகழாய்வுப் பணிகள் நடைபெறுகிறது.
3. மணற்பாங்கான பகுதிகளில் கிணற்றினுள் மணல் சரியாமல் இருக்க உறை கிணறு கட்டப்படுகிறது.
4. கீழடியில் பெண்கள் அணியும் தங்கத்தாலான அணிகலன்கள், கல்மணிகள், கண்ணாடி மணிகள், சுடுமண் மணிகள், சங்கு வளையல்கள், தந்தத்தாலான வளையல் துண்டுகள் ஆகிய பொருள்கள் கிடைத்துள்ளன.
5. திமிலுள்ள காளை, பசு, எருமை, வெள்ளாடு ஆகியவற்றின் எலும்புத்துண்டுகள் உழவுத் தொழிலுக்கு கிடைத்த சான்றுகள் ஆகும்.

### (ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 4)

1. சிவகங்கை
2. உறைகிணறு
3. சுட்ட செங்கல்
4. தொழிற்கூடம்
5. எலும்புத்துண்டுகள்

### (இ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 5)

1. பழமை
2. தங்கம்
3. தக்களி

## 17.3 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

**(அ) கீழ்க்காணும் தொடர்களிலுள்ள இடைச்சொற்களைக் கண்டறிந்து (✓) செய்க. (பக்கம் எண்: 7)**

1. ஆள்
2. ஆன்
3. ஐ
4. ஆல்
5. போல

**(ஆ) பொருத்தமான இடைச்சொற்களை இணைத்துத் தொடர் உருவாக்குக. (பக்கம் எண்: 7)**

1. முருகன் **மரக்கன்றை** நட்டான்.
2. வெண்மணி **குயில் போல** பாடினாள்.
3. வள்ளி **ஊசியால்** தைத்தாள்.
4. மாறன் **கடற்கரைக்குச்** சென்றான்.
5. ஆசிரியர் பாடம் **நடத்தினார்.**

**(இ) படங்களுக்குப் பொருத்தமாக இடைச்சொல் வருமாறு தொடர்கள் உருவாக்குக. (பக்கம் எண்: 8)**

1. ரவி மிதிவண்டியில் கடற்கரைக்குச் சென்றான்.
2. முத்து மீனாவிற்குப் புத்தகம் கொடுத்தான்.
3. முருகன் தூண்டிலால் மீனைப் பிடித்தான்.

## 17.4 மொழியோடு விளையாடுவோம்

**படத்தைப் பார்த்து எழுத்துகளை வரிசைப்படுத்திச் சொல் உருவாக்குவோம். (பக்கம் எண்: 9)**

1. ஆரம்
2. காதணி
3. மூக்குத்தி
4. வளையல்
5. கொலுசு
6. மோதிரம்

## கருத்து விளக்கப்படம்

**கீழ்க்காணும் அறிவிப்பைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்கம் எண்: 10)**

**வினாக்கள் – விடைகள்**

1. நூல் வெளியீட்டு விழாவைப் பற்றியது.
2. ஒரு பண்பாட்டின் பயணம் : சிந்து முதல் வைகை வரை
3. அண்ணா நூற்றாண்டு நூலகம், சென்னை.
4. 15 ஏப்ரல் 2023
5. திரு. ஆர். பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.

## 17.5 கேட்டல் கருத்தறிதல்

**வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 11)**

1. பழங்கள் நிறைந்த கூடையின் ஓவியம்
2. உண்மையான பொருள் போன்று
3. ஓவியத்தைப் பார்த்த மாறன், அருமையாக உள்ளது என்று கூறினான்.
4. பறவைகள், ஓவியத்தைப் பார்த்து உண்மையான பழங்கள் என்றெண்ணி படம் வரையப்பட்ட பலகையைக் கொத்திக் கொத்தி ஏமாற்றம் அடைந்தன.
5. மாறன், கந்தனுக்குப் பாடம் புகட்ட எண்ணி விருந்திற்கு அழைத்தான்.

## 17.7 செந்தமிழ்ச்செல்வம்

**சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 12)**

1. அகழாய்வு – கீழடியில் **அகழாய்வு** நடைபெற்று வருகின்றது.
2. தொலைக்காட்சி – நான் **தொலைக்காட்சி**யில் படம் பார்த்தேன்.
3. வியப்பு – சிலைகளைப் பார்த்து **வியப்பு** அடைந்தேன்.

## 17.8 மொழிபெயர்ப்போம் (பக்கம் எண்: 13)

Archaeology is the study of past, based on objects or parts of buildings that are found under the ground.

தொல்லியல் என்பது பூமிக்கு அடியில் காணப்படும் பொருட்கள் அல்லது கட்டிடங்களின் பாகங்களை அடிப்படையாகக் கொண்டு கடந்த காலத்தைப் பற்றிய ஆய்வு ஆகும்.

## 17.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் சொற்களைப் பயன்படுத்தி, இயற்கையை வருணித்துத் தொடர்கள் எழுதுக. (பக்கம் எண்: 13)**

- **அழகான** ஊர் சோலை.
- ஊரின் எல்லையில் **உயரமான** மலை.
- நகரில் நடுவில் தீப்பெட்டியை அடுக்கினாற் போன்று **நீளமான** கட்டிடங்கள்
- கதிரவன் பார்வை படாத **அடர்ந்த காடுகள்**
- **பூக்கள்** பூத்துக்குலுங்கும் நந்தவனம்
- **மலை**யில் தோன்றி சமவெளியில் பாயும் **ஆறு**
- ஆற்றின் கரை எங்கும் **பசுமையான புல்வெளி**

## 17.11 உயர்நிலைத் திறன்

**ஒரு கதையின் நிகழ்வுகள் இடம் மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை வரிசைப்படுத்தி எழுதுக. (பக்க எண். 13–14)**

1. பள்ளியில் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி அறிவிக்கப்பட்டது.
2. மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்ள முன்வந்தனர்.
3. தமிழ்மணியும் தன் பெயரைப் பதிவுசெய்தான்.
4. போட்டியில் தமிழ்மணி வெற்றி பெறக்கூடாது எனப் பொன்னன் நினைத்தான்.
5. போட்டி நடைபெறுவதற்குப் பதினைந்து நாள் இருந்தது.
6. போட்டி நடைபெறுவதற்கு ஒருவாரத்திற்கு முன்பு, தமிழ்மணியின் திருக்குறள் புத்தகத்தை எடுத்து மறைத்துவைத்தான்.
7. தமிழ்மணி நேரத்தை வீணாக்காமல், முதல் வாரத்திலேயே போட்டிக்குத் தேவையான குறள்களை நன்கு படித்துவிட்டான்.
8. முதற்பரிசு தமிழ்மணிக்கே கிடைத்தது.பொன்னனுக்கு மூன்றாமிடம் கிடைத்தது.
9. தமிழ்மணி எப்படி வெற்றி பெற்றான் எனப் பொன்னன் யோசித்தான்.
10. எந்தச் செயலையும் காலம் கருதிச் செயல்பட்டால் வெற்றி நிச்சயம் என்பதை பொன்னன் உணர்ந்துகொண்டான்.

# பாடம் – 18

## 18.2 படிப்போம்

### பயிற்சிகள்

### (அ) விடை காண்போம் (பக்கம் எண்: 17)

1. ஜப்பானியர்களின் உணவில் முதன்மையானவை அரிசி, மீன், பச்சைக் காய்கறிகள் ஆகியவை ஆகும்.
2. ஜப்பானியர்கள் சாப்ஸ்டிக் (Chopstick) எனப்படும் இரு குச்சிகளை உணவுகள் உண்ண பயன்படுத்துகின்றனர்.
3. ஜப்பானியர்களின் பாரம்பரிய விளையாட்டு சுமோ (Sumo).
4. கிமோனோ (Kimono) என்பது ஜப்பானியர்களின் பாரம்பரிய ஆடையாகும். இதனை விழாக்கள் மற்றும் பாரம்பரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கும்போது அணிவர். பெண்கள், பூக்களால் பின்னப்பட்ட வண்ணக் கிமோனோக்களை அணிந்து, அன்னப்பறவைபோல நடப்பர். இந்தக் காட்சி மிக அழகாக இருக்கும்.
5. ஜப்பானியர்கள், செர்ரி பூக்கள் பூக்கத் தொடங்கும் காலத்தில் பூக்களைப் பார்ப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதனை ஹனாமி (Hanami) என்பர்.

### (ஆ) பொருத்துக. (பக்கம் எண்: 17)

1. வாஷோகு – உணவு
2. கிமோனோ – உடை
3. சுமோ – விளையாட்டு
4. ஹனாமி – பூக்கள் பார்த்தல்

### (இ) சரியான விடையைக் கண்டறிக. (பக்க எண்.17)

1. தவறு
2. சரி
3. தவறு

## 18.3 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

### (அ) மரபுத்தொடரைப் பொருளுடன் பொருத்துக. (பக்கம் எண்: 18)

1. ஆறப்போடுதல் – காலம் தாழ்த்துதல்
2. வெளுத்து வாங்குதல்– மிக நன்றாகச் செய்தல்
3. பூசி மெழுகுதல் – மறைத்தல்

**(ஆ) பின்வரும் தொடர்களில் மரபுத்தொடர்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புக. (பக்கம் எண்: 18)**

1. ஆறப்போட்டான்
2. வெளுத்து வாங்கினான்
3. பூசி மெழுகினான்.

**(இ) பின்வரும் உரையாடலுக்குப் பொருந்தும் மரபுத்தொடரை எழுதுக. (பக்கம் : 18–19)**

1. வெளுத்து வாங்குதல்
2. ஆறப்போடுதல்
3. பூசி மெழுகுதல்

## 18.4 மொழியோடு விளையாடுவோம்

**விடுகதைக்கு விடையளிக்க. (பக்கம் எண்: 19)**

1. சூரியன்
2. கைவிரல்
3. நாற்காலி
4. முட்டை
5. வாழைமரம்

## 18.5 கேட்டல் கருத்தறிதல்

**வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 20)**

1. சூ
2. ஜான்சிக்கு
3. 'இவி' கொடி
4. தன் வாழ்நாள் குறைவதை உணர்த்துவதாக ஜான்சி நினைத்தாள்.
5. கடைசி இலை என்ற கதையின் மூலம் சூ ஜான்சிக்கு எவ்வாறு தன்னம்பிக்கை ஊட்டினாள் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

## 18.7 செந்தமிழ்ச்செல்வம்

**சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 22)**

1. அழகு – என் அம்மா **அழகு**டையவர்.
2. இசை – நான் கருநாடக **இசை**யில் பாடுவேன்.
3. விளையாட்டு – எனக்குப் பிடித்த **விளையாட்டு** கபடி

## 18.8 மொழிபெயர்ப்போம் (பக்கம் எண்: 22)

ஜப்பானியர்கள் அழகுணர்ச்சி மிக்கவர்கள். மேலும், விழாக்கள் நடத்துவதிலும் விருந்து பரிமாறுவதிலும் பழக்கவழக்கங்களை முறையாகப் பின்பற்றுவதிலும் சிறந்தவர்களாக விளங்குகின்றனர்.

The Japanese are very aesthetic, and they are also good at holding ceremonies, serving food, and following customs properly.

## 18.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**மை என முடியும்படி மூன்று சொல்கொண்ட தொடர் உருவாக்குக. (பக்க எண். 23)**

நாட்டுக்குத் தேவை வளமை
நம்மை உயர்த்துவது வாய்மை
பேச்சில் வேண்டும் இனிமை
<u>அன்பு செலுத்துவது தாய்மை</u>
<u>ஒழுக்கமாய் வாழ்வது மேன்மை</u>
<u>நாட்டைக் காப்பது கடமை</u>

## 18.11 கட்டுரை எழுதுவோம்

**கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு உரைப்பகதி உருவாக்குக. (பக்க எண். 23)**

**பயிற்சி**

மணி மாலைநேரம் சாலையோரம் நடந்து சென்றான். அங்கு பெரிய மரத்தின் அருகில் நாய்க்குட்டிகள் பசியால் வாடி, அலைந்துகொண்டிருந்தன. அதன் அருகில் சென்று பார்த்தான். இந்நாட்டிக்குட்டியின் பசியால் அலைவது கண்டு வருந்தி, என்ன செய்யலாம் என்று யோசித்தான். அருகில் கடையைக் கண்டான். அக்கடைக்குச் சென்று பால் வாங்கினான். அந்த பாலை நாய்க்குட்டிகளுக்குக் கொடுத்தான். பசியில் வாடிய நாய்க்குட்டிகள் பாலை குடித்தன. பசி நீங்கியவுடன் மகிழ்ச்சியுடன் துள்ளி குதித்தன. அதைக்கண்டு மணி மகிழ்ச்சியடைந்தான். மணியிடம் வந்த நாய்க்குட்டிகள் அவனுடன் சேர்ந்து விளையாடின..

# பாடம் – 19

## 19.2 படிப்போம்

### பயிற்சிகள்

### (அ) வினாக்களுக்கு ஏற்ற விடையை எழுதுக. (பக்கம் எண்: 27)

1. தொல்காப்பியம்
2. தொல்காப்பியர்
3. ஆறு
4. மூன்றறிவு என்பது நுகர்தல் அடிப்படையில் பிரிக்கப்படுகிறது.
5. தொல்காப்பியர் ஐம்புலன் அடிப்படையில் உயிர்களைப் பாகுபடுத்தியுள்ளார். ஐம்புலன் அறிவுடன் மனத்தால் பகுத்தறியக் கூடிய பகுத்தறிவு என்னும் ஆறாவது அறிவையும் மனிதனுக்கு சுட்டிக் காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தொல்காப்பியர் கூறும் ஆறு அறிவுகளை கீழ்வரும் பாடல் விவரிக்கிறது.

   ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே
   இரண்டு அறிவதுவே அதனொடு நாவே
   மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே
   நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே
   ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே
   ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே
   நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே"

   இத்தொல்காப்பியப் பாடலில் ஆறு அறிவு குறித்து எளிமையாக விளக்கப்பட்டுள்ளது.

### (ஆ) சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 27)

1. இலக்கண நூல்
2. ஆறு
3. நாக்கு
4. ஆறு
5. மனம்

**(இ) கீழ்க்காணும் வினாக்கள் சரியா? தவறா? என்பதைக் (✓) குறியிட்டுக் காட்டுக. (பக்கம் எண். 27)**

1. தவறு
2. சரி
3. தவறு
4. சரி
5. சரி

## 19.3 தெரிந்துகொள்வோம்

**பயிற்சிகள்**

**(அ) கீழ்க்காணும் தொடர்களை உரிய பெயரெச்சச் சொற்களைக் கொண்டு நிரப்புக. (பக்கம் எண்: 29)**

1. நல்ல
2. பாடிய
3. வரைந்த
4. ஆடிய
5. எழுதிய

**(ஆ)கீழ்க்காணும் சொற்றொடர்களை அட்டவணைப்படுத்துக. (பக்கம் எண்: 29)**

| தெரிநிலை பெயரெச்சம் | குறிப்புப் பெயரெச்சம் |
|---|---|
| நடிக்கின்ற நாடகம் | அழகிய மலர் |
| சொல்லிய கருத்து | சிறந்த கவிதை |
| சிரித்த குழந்தை | நிறைய பணம் |

**(இ) விடுபட்ட கட்டங்களை நிரப்புக. (பக்கம் எண்: 30)**

| பெயரெச்சத் தொடர் | படித்த கபிலன் |
|---|---|
| செய்பவன் | கபிலன் |
| கருவி | பாட நூல் |
| நிலம் | வகுப்பு |
| செயல் | படித்தல் |
| காலம் | இறந்த காலம் |
| செய்பொருள் | பாடம் |

**(ஈ) பின்வரும் உரைப்பகுதியிலிருந்து பெயரெச்சங்களைக் கண்டறிந்து வகைப்படுத்துக. (பக்கம் எண்: 30)**

| தெரிநிலை பெயரெச்சம் | குறிப்புப் பெயரெச்சம் |
|---|---|
| இறங்கிய மாணவர்கள் | நல்ல கதை |
| கூறிய கதை | |

## 19.4 மொழியோடு விளையாடுவோம்

**வட்டத்திலுள்ள எழுத்தை உரிய இடத்தில் நிரப்பிப் புதிய சொற்களை உருவாக்குக. (பக்கம் எண்: 31)**

1. கயல்
2. பயணம்
3. தடயம்
4. நாணயம்
5. பந்தயம்

## 19.5 கேட்டல் கருத்தறிதல்

**வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 31)**

1. 4 அடி நீளமுள்ள பனைமரத்துண்டின் அடி மற்றும் நுனி எது என்று கண்டுபிடிக்க வேண்டும்.
2. ஆயிரம் பொற்காசு
3. இளைஞன், மரத்துண்டின் அடிப்பகுதியை கண்டறிய குழியை வெட்டினான்?
4. பனைமரம்
5. இளைஞனின் தாத்தா

## 19.7 செந்தமிழ்ச்செல்வம்

**சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 33)**

1. **சிந்தனை**
   பழந்தமிழர்கள் அறிவியல் **சிந்தனை** கொண்டிருந்தனர்.
2. **ஐம்புலன்**
   மெய், வாய், மூக்கு, கண், காது ஆகியவை **ஐம்புலன்கள்** ஆகும்.
3. **ஆற்றல்**
   மனித **ஆற்றல்** மிகப் பெரிய சக்தியாகும்.

## 19.8 மொழிபெயர்ப்போம்

தமிழர்கள், அறிவியல் சிந்தனை உடையவர்கள். தமிழ் இலக்கியங்கள், இதனை உறுதி செய்கின்றன. பிற்காலக் கண்டுபிடிப்புகளுக்கு அவை முன்னோடியாய் விளங்கின.

Tamils are scientifically minded. Tamil literature confirms this. They were the forerunners of later discoveries.

## 19.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**உரிய சொற்களைக் கொண்டு கவிதையை நிறைவு செய்க. (பக்கம் எண்: 34)**

சிவந்த வானம் அழகு

சிரிக்கும் **குழந்தை** அழகு

வீசும் **தென்றல்** அழகு

வீட்டுப் **பூனை** அழகு

மலரும் **பூக்கள்** அழகு

மயிலின் **தோகை** அழகு

## 19.11 கட்டுரை எழுதுவோம்

**கீழ்க்காணும் படக்காட்சிகளையும் குறிப்புச்சொற்களையும் கொண்டு, உரைப்பகுதி உருவாக்குக. (பக்கம் எண்: 34)**

வேடன் ஒருவன் காட்டிற்குச் சென்றான். அக்காட்டில் புறாக்கள் கூட்டமாக இரை தின்றுக் கொண்டிருந்தன. அதனை வேடன் கண்டான். அப்புறாக்களைப் பிடிக்க எண்ணினான். புறாக்கள் பார்க்காதவாறு மரத்தின் பின்னால் நின்றுக் கொண்டு, தன் கையில் இருந்த வலையை புறாக்கள் மீது வீசினான். புறாக்கள் அனைத்தும் வலையில் சிக்கிக் கொண்டன. ஒவ்வொரு புறாவும் வலையிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தன. அப்போது வேடன் மரத்தின் பின்னாலிருந்து புறாக்களைப் பிடிப்பதற்காக வந்தான். வேடன் வருவதைக் கண்ட புறாக்களில் ஒன்று நாம் ஒற்றுமையுடன் இருந்தால்

மட்டுமே வேடனிடம் இருந்து தப்பிக்க முடியு ம் என்று கூறியது. அதற்கு ஒரே வழி நாம் எல்லோரும் ஒன்றாக ஒரே நேரத்தில் வலையோடு பறந்து விட்டால், வேனிடமிருந்து தப்பித்து விடலாம் என்று கூறியது. இதைக்கேட்ட புறாக்கள் இதை ஏற்றுக்கொண்டன. உடனே, அனைத்து புறாக்களும் ஒன்றாக வலையோடு சேர்ந்து பறந்து சென்றன. இப்புறாக்களைப் பிடிப்பதற்காக வேடன் துரத்திக் கொண்டே ஓடி வந்தான். எனினும் அவனால் பிடிக்க முடியவில்லை. புறாக்கள் மேலே உயரத்தில் பறந்ததால் வேடனிடம் தப்பித்துச் சென்றுவிட்டன. ஒற்றுமையுடன் இருந்தால் எதனையும் எதிர்கொண்டு, நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

# பாடம் – 20

## 20.2 படிப்போம்

### பயிற்சிகள்

### (அ) விடை காண்போம் (பக்கம் எண்: 38)

1. கல்பனா சாவ்லா
2. பொறியியல் பட்டப் படிப்பில் வானூர்தித் துறையைத் தேர்ந்தெடுத்து படித்தார்.
3. கொலம்பியா விண்கலத்தில் சென்றதே தம் முதல் விண்வெளி நிகழ்வு எனக் கல்பனா சாவ்லா குறிப்பிடுகிறார்.
4. இரண்டாவது முறையாகக் கொலம்பியா விண்கலம் ஏறி, விண்வெளியில் 16 நாள் தங்கியிருந்து ஆய்வு செய்தது கல்பனா சாவ்லாவின் அரிய சாதனை ஆகும்.
5. நான் கணினித் துறையில் சாதிக்க விரும்புகிறேன்.

### (ஆ) கீழ்க்காணும் வினாக்கள் சரியா? தவறா? என்பதைக் (✓) குறியிட்டு காட்டுக. (பக்கம் எண்: 38)

1. தவறு
2. சரி
3. சரி

## 20.3 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

### (அ) பொருத்தமான இரட்டுறமொழிதல் சொல்லைக்கொண்டு அமையுமாறு தொடரை உருவாக்குக. (பக்கம் எண்: 40)

1. அந்தமான், அந்த மான்
2. பலகை, பல கை
3. பெருங்காயம், பெருங்காயம்

### (ஆ) பொருத்தமான இரட்டுறமொழிதல் சொல்லைக் கண்டறிக. (பக்கம் எண்: 40)

1. வைகை, வை கை
2. ஆறுதலை, ஆறு தலை

## 20.4 மொழியோடு விளையாடுவோம்

### குறிப்புகளைக் கொண்டு, கட்டத்தில் இடம் மாறியுள்ள சொற்களைக் கண்டறிக. (பக்கம் எண்: 41)

1. விண்வெளி
2. பாரத ரத்னா
3. இந்தியா
4. புவிஈர்ப்புவிசை
5. விண்மீன்

## கருத்து விளக்கப்படம்

### வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 42)

1. விண்வெளி ஆராய்ச்சி மையம், நாசா அமெரிக்க ஐக்கிய நாடுகள்
2. 25.10.2023 முதல் 28.10.2023 வரை நான்கு நாள்கள்
3. விரைவு துலங்கல் குறியீட்டை வருடியைப் பயன்படுத்தி விண்ணப்பங்களைக் கூகுள் படிவத்தில் நிரப்ப வேண்டும்.
4. 31.08.2023
5. பள்ளி, கல்லூரி மாணவர்கள்

## 20.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 43)

1. கையில் தொட்டாலே ஒட்டிக்கொள்ளும் தன்மை உடையது.
2. அக்காலத்தில் எந்தப் பொருளின்மீதும் தண்ணீர் ஒட்டாமல் இருக்க இரப்பரைப் பயன்படுத்தினர்.
3. சார்லஸ் குட்இயர் (Charles Goodyear)
4. இரப்பரை ஆய்வு செய்துகொண்டிருந்தபோது, இரப்பரிலிருந்து சிறுபகுதி அருகில் எரிந்துகொண்டிருந்த அடுப்பில் விழுந்தது.
5. அமெரிக்கா

## 20.7 செந்தமிழ்ச்செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 44)

1. **விண்கலம்**
   இந்தியா நிலாவில் ஆய்வு செய்வதற்கு **விண்கலத்தை** அனுப்பியுள்ளது.
2. **விண்வெளி**
   **விண்வெளி**யில் பல ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.
3. **பாராட்டு**
   நான் கட்டுரைப் போட்டியில் கலந்துகொண்டு **பாராட்டு**ச் சான்றிதழ் பெற்றேன்.
4. **பதக்கம்**
   சாதனையாளருக்குப் **பதக்கம்** வழங்கப்படுகிறது.
5. **மாணவர்கள்**
   **மாணவர்கள்** விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றனர்.

## 20.8 மொழிபெயர்ப்போம் (பக்க எண். 45)

Stephen William Hawking was the greatest of cosmologist and physicist. He was born in England in 1942. After graduating he did his research in Cosmology at Cambridge.

ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங் மிகச்சிறந்த அண்டவியல் நிபுணர் மற்றும் இயற்பியலாளர் ஆவார். அவர் 1942 இல் இங்கிலாந்தில் பிறந்தார். பட்டம் பெற்ற பிறகு கேம்பிரிட்ஜில் அண்டவியலில் ஆராய்ச்சி செய்தார்.

## 20.10 படைப்பாற்றல் வளர்ப்போம் (பக்க எண். 45)

தாமஸ் ஆல்வா எடிசனை நேர்காணல் செய்வதற்கான கேள்விகள் :

1. அறிவியலின் மீது உங்களுக்கு விருப்பம் ஏற்படக் காரணம் என்ன?
2. நீங்கள் எண்ணற்ற கண்டுபிடிப்புகளைத் தந்திருக்கிறீர்கள். அவற்றுள் எந்தக் கண்டுபிடிப்பை மிகவும் கடினமாக உணர்கிறீர்கள்?
3. உங்களுக்கு மிகவும் வியப்பைத் தந்த கண்டுபிடிப்பு எது?
4. உங்களின் முதல் கண்டுபிடிப்பு எது?
5. கண்டுபிடிப்பின் மீதான ஆர்வத்தை எவ்வாறு வளர்த்துக் கொள்கிறீர்கள்?
6. உங்களது ஆராய்ச்சியினால் அன்றாட வாழ்க்கை எவ்வாறு செல்கிறது?

## 20.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு, உங்கள் நண்பருக்குக் கடிதம் எழுதுக.**

01.01.2025
சென்னை

அன்புள்ள நண்பா!

நான் இங்கு நலமாக உள்ளேன். தங்களுடைய நலமறிய ஆவல். இங்கு அரசு கலைக் கல்லூரியில் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. அங்கு நிறைய மாணவர்கள் தங்களுடைய படைப்புகளைக் காட்சிப்படுத்தி இருந்தனர். அனைத்தும் அவ்வளவு வியப்பாகவும், பயன்மிக்கதாகவும் இருந்தது. நீயும் அறிவியல் கண்காட்சிக்குச் சென்று அதன் படைப்புகளைப் பற்றி எனக்குத் தெரியப்படுத்து.

அன்புடன்
உன் நண்பன்
நந்தா

முகவரி

பாலா
வாஷிங்டன் நகர்
அம்மாச்சிபாளையம்
திருநெல்வேலி

# பாடம் – 21

## 21.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடையளிப்போம் (ப.எண்.48)

1. செயலி என்பது ஒரு பயன்பாடு
2. செயலி என்பதை ஆங்கிலத்தில் App என்பர். Application என்பதன் சுருக்கமே App என்பதாகும்.
3. கதைப்பகுதி
4. 'சொல்லி அடி' செயலி தூய தமிழ்ச்சொற்களை மீட்டு எடுக்கப் பயன்படுகிறது.
5. ஒரு செயலியைப் பதிவிறக்கம் செய்வதற்கு முன்பு, அவற்றின் நம்பகத்தன்மையை ஆராய வேண்டும்.

### ஆ) பின்வரும் வினாக்கள் – விடைகள் சரியா / தவறா எனக் குறிப்பிடுக. (ப.எண்.49)

1. தவறு
2. சரி
3. தவறு
4. தவறு
5. சரி

## 21.3 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

### அ) உரையாடலைப் படித்து வினையெச்சச் சொற்களைக் கோடிட்டுக் காட்டுக. (ப.எண்.50)

படித்துவிட்டானா ; படித்து முடித்தான் ; சென்றுள்ளான் ; நடந்து சென்றான் ; விரைந்து வருவான்

### ஆ) உரைப்பகுதியைப் படித்து வினையெச்சங்களை அட்டவணைப்படுத்துக. (ப.எண்.50)

| தெரிநிலை வினையெச்சம் | குறிப்பு வினையெச்சம் |
|---|---|
| விரைந்து படித்தாள் | மெல்லத் தேடினாள் |
| எடுத்துக் கூறினாள் | மகிழ்ந்து பாராட்டினார் |

**இ) பின்வரும் வினாக்களைப் பொருத்தமான வினையெச்சங்கள் கொண்டு நிரப்புக. (ப.எண்.50)**

1. மெல்ல நடந்தான்
2. விரைந்து எழுதினர்
3. விரைந்து சென்றான்
4. நடந்து சென்றான்
5. எழுதி வந்தனர்

## 21.4 மொழியோடு விளையாடுவோம்

**புள்ளிகளை இணைத்துப் பழத்தில் மறைந்துள்ள பழமொழியைக் கண்டறிந்து எழுதுக (ப.எண்.51)**

"போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து"

## 21.5 கேட்டல் கருத்தறிதல்

**வினாக்கள் – விடைகள் (ப.எண்.52)**

1. பேராசிரியர் தம் நண்பர்களுடன் எகிப்து பிரமிடுகளைப் பார்க்கச் சென்றார்.
2. நண்பர், பேராசிரியரிடம், 'இந்தப் பிரமிடின் உயரத்தைச் சரியாகக் கூறமுடியுமா?' என்று கேட்டார்.
3. அளவு நாடா (Tap)
4. பேராசிரியர் அளவுநாடாவைக் கொண்டு பிரமிடின் நிழலையும், தம் உயரத்தையும் கணக்கிட்டு பிரமிட்டின் உயரத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டார்.
5. நண்பர்களிடம் பேராசிரியர், "இந்த உலகில் இயலாத செயல் என்று எதுவும் இல்லை. எதற்கும் எளிய வழி ஒன்று உள்ளது" என்று கூறினார்.

## 21.7 செந்தமிழ்ச்செல்வம்

**சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 53)**

1. **திறன்பேசி**
   தற்போது தொலைதூரங்களுக்குச் செய்திகளை விரைவாக அனுப்புவதில் திறன்பேசி முக்கிய கருவியாகப் பயன்படுகிறது.
2. **ஆர்வம்**
   மாணவர்கள் தமிழைக் கற்க ஆர்வம் கொண்டுள்ளனர்.
3. **மென்பொருள்**
   தமிழ் பல மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

## 21.8 மொழிபெயர்ப்போம் (பக்க எண். 54)

இணைய நூலகம் மாணவர்களுக்கு மிகவும் பயனளிக்கக் கூடியதாக உள்ளது. இணைய நூலகத்தில் பல்வேறு நூல்கள் சேமிக்கப்பட்டுள்ளன. அகராதிகள், இலக்கியங்கள், கதைநூல்கள், பாடநூல்கள், பல்துறை நூல்கள் போன்றவற்றைப் படித்துப் பயன்பெறலாம்.

The online library is very beneficial for students. Various books are stored in the online library. You can benefit by reading writings, literature, story books, textbooks, and multi–disciplinary books.

## 21.10 படைப்பாற்றல் வளர்ப்போம் (பக்க எண். 54)

பின்வரும் பாடலைப் படித்துத் தொடர்ந்து எழுதுக.

பூ பூ என்ன பூ?
மல்லிகைப் பூ
என்ன மல்லிகை?
காட்டு மல்லிகை
என்ன காடு?
ஆற்காடு
என்ன ஆறு?
பாலாறு
என்ன பால்?
பசும்பால்
என்ன பசு?
நாட்டுப் பசு
என்ன நாடு?
தமிழ்நாடு
என்ன தமிழ்?
செந்தமிழ்.

## 21.11 உயர்நிலைத்திறன்

**பின்வரும் குறிப்புச்சொற்களைப் பயன்படுத்தி, அழைப்பிதழுக்கான செய்திகளை உருவாக்குக.**



**திருவள்ளுவர் அரசுமேல்நிலைப்பள்ளி**
**அழகாபுரம்**

**அன்புடையீர்,**

வருகின்ற 15.07.2025 அன்று மாலை 4.00 மணி அளவில் பள்ளி மைதானத்தில் 7ஆம் ஆண்டு விழாவும், விளையாட்டு விழாவும் நடைபெறவுள்ளது, இவ்விழாவில் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**நிகழ்ச்சி**

**தலைமையுரை :** முனைவர் கோ. ரூபாதேவி

**வாழ்த்துரை :** முனைவர் ஹ. அபிராமி

**கலை நிகழ்ச்சிகள்:** பள்ளி மாணவ– மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள்

**சிறப்பு விருந்தினர் :** கவிஞர் பாண்டியன்

**சிறப்புரை :** முனைவர் ப. கங்கா

**பரிசளிப்பு :** விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவ– மாணவர்களுக்குப் பரிசு வழங்குதல்

**வாழ்த்துரை :** தலைமையாசிரியர்

**இவண்**
**பள்ளி நிர்வாகக் குழுவினர்**
**தலைமையாசிரியர், ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவ – மாணவிகள்**

# பாடம் – 22

## 22.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம் (ப.எண்.59)

1. கதிர் தன் அம்மாவிடம் கட்டுரை எழுதுவதற்காக மடிக்கணினி கேட்டான்.
2. இணையத்தில் அறியாமையால் சில எதிர்மறையான விளைவுகள் ஏற்பட்டுவிடுகின்றன. இதனைத் தடுக்கவே பாதுகாப்புச் செயலி இயக்கப்படுகிறது.
3. சுடர்விழி, தனது புகைப்படத்தை யாராவது தவறாகப் பயன்படுத்திவிட்டால் என்ன செய்வது? என்று எண்ணி முகநூலில் பதிவிடத் தயங்கினாள்.
4. சுயவிவரம் பாதுகாப்பு (Profi;e Lock) என்பது நண்பர்கள் மட்டுமே முகநூலில் ஒருவரின் விவரங்களையும் புகைப்படத்தையும் காணமுடியும். மற்றவர்களால் சுயவிவரத்தில் (profile) உள்ள சிறிய அளவிலான புகைப்படத்தை மட்டுமே பார்க்கமுடியும். அதைப் பதிவிறக்கம் செய்யவோ, பெரிதாக்கிப் பார்க்கவோ முடியாது.
5. கடவுச்சொல் பயனரின் அடையாளத்தை அங்கீகரிக்கிறது. பயனரின் தரவு மற்றும் தகவலுக்கான பாதுகாப்பை கடவுச்சொல் உறுதி செய்கிறது.

### ஆ) சரியா, தவறா எனக் கூறுக (ப.எண்.59)

1. சரி
2. சரி
3. சரி
4. சரி
5. தவறு

### இ) கீழ்க்காணும் விழிப்புணர்வுச் செய்திகள் விடையாக வருமாறு, வினாக்கள் – விடைகள் உருவாக்குக. –ப.எண்.59

1. யாருடன் சமூக வலைத்தளங்களில் இணைதல் கூடாது ?
2. இணையத்தில் புகைப்படத்தை வெளியிடும்போது எப்படி இருக்க வேண்டும் ?
3. கடவுச் சொற்களை யார் பயன்படுத்த வேண்டும் ?
4. திறன்பேசி, கணினி, மடிக்கணி போன்றவற்றை வைரஸ் (virus) தாக்குதல் ஏற்படாமலிருக்க அவ்வப்போது என்ன செய்ய வேண்டும் ?

## 22.3 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

### அ) பொருத்தமான சொல்லைக் கொண்டு தொடரை நிறைவு செய்க (ப.எண்.61)

1. கண்
2. வந்தனர்
3. பால்
4. வலை
5. உறுதி
6. கருதி

### ஆ) தொடரில் காணப்படும் பிழைகளை வட்டமிடுக. (ப.எண்.61)

1. கடற்**கறை**யில் மக்**கல்** கூடி**ணர்**
2. கு**ள**ந்தை சி**றி**த்தது
3. உழவர் கா**லை**யுடன் செ**ண்**றார்
4. பு**ரா**வும் எ**ரு**ம்பும் நண்பர்**கல்**
5. கன்னாடி முகம் பா**ற்க்**க உதவும்

### இ) கீழ்க்காணும் உரைப்பகுதியிலுள்ள பிழைகளை நீக்கி எழுதுக (ப.எண்.61)

அகிலனும் அவன் நண்பனும் பூங்காவிற்குச் சென்றனர். அங்குப் பந்து விளையாடினர். அப்போது மழை பெய்தது. இருவரும் மழையை இரசித்தவாறே வீட்டிற்கு வந்தனர்.

### ஈ) பொருத்துக

1. மனம் – உள்ளம்
2. மணம் – வாசனை
3. அழகு – வனப்பு
4. அலகு – பறவையின் மூக்கு
5. வலை – மீன் பிடிக்க உதவுவது

## 22.4 மொழியோடு விளையாடுவோம்

### குறிப்புகளைப் பார்த்துக் கட்டங்களைக் கீழிலிருந்து மேலாக நிரப்புக. (ப.எண்.62)

1. கண்
2. பூங்கா
3. வனப்பு
4. இயல்
5. ஆறு
6. தீ

## 22.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (ப.எண்.63)

1. நண்பர்
2. தாமஸ் ஆல்வா எடிசனின் வீட்டின் வெளிப்புறத்தில் உள்ள சுழல்கதவைச் சுற்றிக்கொண்டு உள்ளே வரவேண்டும்.
3. நண்பர் சுழல் கதவைச் சுற்ற கடினமாக இருக்கிறது என்றார். அதற்கு எடிசன் எனக்கு மிகப்பயனுடையதாக இருக்கிறது என்றார் இதைக் கேட்ட நண்பர் வியப்படைந்தார்.
4. சுழல் கதவுடன் இயந்திரம் பொருத்தப்பட்டிருந்தது.
5. சுழல் கதவை ஒரு முறை சுற்றினால் அது எட்டு லிட்டர் தண்ணீரைத் தொட்டியில் நிரப்பும்.

## 22.7 செந்தமிழ்ச்செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 64)

1. **வங்கி கணக்கு எண்**
   நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதியம் **வங்கி கணக்கு எண்** மூலம் செலுத்தப்படுகிறது.

2. **செல்பேசி**
   **செல்பேசி**யில் இணையத்தின் மூலம் தரவுகளைப் பெறலாம்.

3. **மடிக்கணினி**

தற்போது **மடிக்கணினி** பயன்பாட்டில் அதிகமாக உள்ளது.

4. **செயலி**

இணையப் பாதுகாப்புக்கு **செயலி** பயன்படுகிறது.

## 22.8 மொழிபெயர்ப்போம் (பக்க எண். 64)

உலகின் எந்த மூலையிலிருந்தும் நமக்குத் தேவைப்படும் செய்திகளை இணையத்தின் வழி உடனுக்குடன் பெறமுடியும்.

We can instantly get the news we need from any corner of the world through the Internet.

## 22.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் விடைகள் வருமாறு, ஐந்து விடுகதை உருவாக்குக. (பக்கம் எண்: 65)**

1. தண்ணீர்

விடுகதை – அள்ள முடியும்; ஆனால் கிள்ள முடியாது. அது என்ன?

2. குடை

விடுகதை – வெளியில் விரியும்; வீட்டில் சுருங்கும். அது என்ன?

3. உப்பு

விடுகதை – கடல் நீரில் வளர்ந்து, மழை நீரில் மடிவது. அது என்ன?

4. குதிரை

விடுகதை – ஓடும்போது வால் குறையும், நின்றால் நிற்கும். அது என்ன?

5. மழை

விடுகதை – பூ கொட்ட கொட்ட ஒன்றையும் தனியே பொறுக்க முடியவில்லை. அது என்ன?

6. சக்கரம்

விடுகதை – ஓடும் வண்டிக்கு உறுதுணையாக இருக்கும். அது என்ன?

7. புகை

விடுகதை – கண்ணில் தென்படும், கையில் பிடிக்க முடியாது. அது என்ன?

## 22.11 உயர்நிலைத்திறன்

### கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு, சிறுகதை எழுதுக.

வாணியும் மீனாவும் தோழிகள். இருவரும் ஒரே பள்ளியில் படிக்கின்றனர். இருவருக்கும் கூடைப்பந்து விளையாட்டில் அதிக ஆர்வம் கொண்டிருந்தனர். வாணியின் பெற்றோர் வாணியை ஊக்குவித்தனர். வாணியும் படிப்பிலும் விளையாட்டிலும் சமஅளவு ஆர்வத்தைக் காட்டினாள்.

ஆனால், மீனாவின் பெற்றோர் படிப்புக்கு இடையூறாக இருக்கும் என மீனாவை விளையாடுவதை தடை செய்தனர். மீனா மிகவும் வருந்தினாள்.

ஒரு நாள் அவர்கள் படிக்கும் பள்ளியில் பெற்றோர் விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாணவ–மாணவிகளின் பெற்றோர்கள் கலந்துகொண்டனர். அவ்விழாவில் பேசிய ஆசிரியர் மாணவர்களுக்குப் படிப்பும் விளையாட்டும் இரண்டுமே தேவை. படிப்பு எவ்வாறு அறிவை கொடுக்கிறதோ, அதே போன்று விளையாட்டும் மாணவர்களுக்கு உடல் வலிமையையும், மனவலிமையையும் கொடுக்கிறது. எனவே, மாணவர்களை படிப்பு, விளையாட்டு இரண்டும் ஊக்கப்படுத்துவது பெற்றோர் கடமை என்று கூறினார்.

அதனைக் கேட்ட மீனாவின் பெற்றோர் ஆசிரியர் கூறியதைப் புரிந்துகொண்டு மீனாவை விளையாட அனுமதித்தனர். மீனாவும் மகிழ்ச்சியோடு விளையாடினாள். போட்டிகளில் விளையாடி பரிசையும் தோழிகள் இருவரும் பெற்றனர்.

# பாடம் – 23

## 23.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க (ப.எண்.69)

1. பசு
2. பசுவின் கன்று தேர்க்காலில் அகப்பட்டு இறந்துவிட்டது.
3. இளவரசர் தேரில் நகரைச் சுற்றிப்பார்க்கச் சென்றபோது, பசுவின் கன்று ஒன்று தேர்க்காலில் அகப்பட்டு இறந்துவிட்டது. இதனால் பசு நீதி கேட்டு ஆராய்ச்சி மணியை அடித்தது.
4. காவலர்
5. சிபி மன்னரின் வழித்தோன்றல் என்று மனுநீதிச்சோழன் கூறினார்
6. மனுநீதிச்சோழன், நீதி கேட்டு வந்த பசுவிற்காக தன் மகன் என்று பாராமல் கன்றைப் போல் தேர்க்காலில் இட்டு கொல்லுமாறு ஆணையிட்டார். எல்லா உயிர்களையும் தம் உயிர்போல் பாதுகாப்பது மன்னரின் கடமையாகும். எனவே என் மகனைத் தண்டிக்காது தவறுதல் முறையன்று என்று கூறி தண்டனை நிறைவேற்றி சிறந்த ஆட்சியாளனாகத் திகழ்ந்தார்.

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக. (ப.எண்.69)

1. ஆராய்ச்சி மணியை
2. காவலர்
3. தேர்க்காலில்
4. தம் உயிர்போல்
5. சிபி

### இ) பின்வரும் வினாக்கள் – விடைகள் சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக. (ப.எண்.69)

1. தவறு
2. சரி
3. தவறு
4. தவறு
5. சரி

## 23.3 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

### அ) தொடரில் வேற்றுமை உருபுகளைக் கண்டறிக. (ப.எண்.71)

1. ஐ
2. ஆல்
3. கு

### ஆ) தொடரில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபுகளை வட்டமிடுக. (ப.எண்.71)

1. ஐ
2. ஐ
3. ஆல்
4. ஆல்
5. கு
6. கு

### இ) பொருத்தமான சொல்லை நிரப்பிக் கதையை நிறைவு செய்க. (ப.எண்.71)

1. விற்பதற்கு
2. வண்டியை
3. விநோதினிக்கு
4. அதனால்
5. குணத்தை
6. இருந்தால்

### ஈ) உருபுகள் சேர்க்கப்பட்ட சொற்களை வகைப்படுத்தி எழுது. (ப.எண்.71)

| ஐ | ஆல் | கு |
|---|---|---|
| பாம்பை | மரத்தால் | தமிழரசிக்கு |
| சிங்கத்தை | பள்ளியால் | பூனைக்கு |
| பாடலை | கையால் | வீட்டிற்கு |

## 23.4 மொழியோடு விளையாடுவோம்

### குறிப்புகளைப் படித்துக் கட்டங்களை நிரப்புக – ப.எண்.73

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. கடற்கரை | 1. கனவு |
| 3. ஆறு | 2. கன்று |
| 4. கணினி | 3. ஆனி |
| | 4. கள் |
| | 5. கண்காட்சி |
| **வலமிருந்து இடம்** | **கீழிலிருந்து மேல்** |
| 6. காது | 7. பசை |
| 8. சிற்பம் | |

## கருத்து விளக்கப்படம்

### கீழ்க்காணும் கண்காட்சி அறிவிப்பைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. (ப.எண்.73)

### வினாக்கள் – விடைகள்

1. கண்காட்சி நாணயத்தைப் பற்றியது
2. 11.06.23 முதல் 16.06.23 வரை கண்காட்சி நடைபெறுகிறது.
3. கன்னிமாரா பொது நூலகம், சென்னை.
4. 16–ஆம் நூற்றாண்டு நாணயங்களை முதல் 20–ஆம் நூற்றாண்டு நாணயங்கள் வரை இடம்பெறுகின்றன.
5. "உங்களிடம் உள்ள பழைய நாணயங்கள் தக்க மதிப்பு கொடுத்து வாங்கிகொள்ளப்படும்" என்ற குறிப்பு விளரம்பர அட்டையில் இடம்பெற்றிருந்தன.

## 23.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (ப.எண்.75)

1. மன்னனிடம் குழந்தையை தூக்கிக்கொண்டு வந்த பெண்கள் இருவருமே குழந்தை என்னுடையது என்று வாதிட்டனர். எனவே குழந்தையை பெற்றுத்தருமாறு நீதிவேண்டி மன்னனைத் தேடி வந்தனர்.
2. மன்னன், காவலனிடம் "வாளை எடுத்துக் குழந்தையை இரண்டாக வெட்டி ஆளுக்குப் பாதியாகக் கொடு" என்றார்.

3. குழந்தையை வெட்ட வேண்டாம். அவளே வளர்க்கட்டும் என்று கூறினாள்.
4. "குழந்தைக்கு எந்தத் துன்பமும் வரக்கூடாது என்று நினைத்தவளே உண்மையான தாய்". எனவே, குழந்தையை அவளிடம் ஒப்படைக்குமாறு மன்னன் கூறினார்.
5. சாலமோன்

## 23.7 செந்தமிழ்ச்செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 75)

1. **காவலர்**

   காக்கும் பணியை செய்பவர் **காவலர்** .

2. **வழக்கு**

   நீதிமன்றத்தில் **வழக்கு** தொடுக்கப்படுகிறது.

3. **தீர்ப்பு**

   வழக்கிற்கான **தீர்ப்பு** நீதிபதியால் வழங்கப்படுகிறது.

4. **புறா**

   சிபிமன்னர் **புறாவுக்காக** தன் தசையை வழங்கினார்.

## 23.8 மொழிபெயர்ப்போம் (பக்க எண். 45)

King Ellalan also known as Manu Neethi Chozhan was a famous Chozha king who ruled from Tiruvarur in Tamilnadu.

மனு நீதி சோழன் என்றழைக்கப்படும் எல்லாளன் மன்னன் தமிழ்நாட்டில் திருவாரூரில் இருந்து ஆட்சி செய்த ஒரு புகழ்பெற்ற சோழ மன்னன்.

## 23.10 படைப்பாற்றல் வளர்ப்போம் (பக்க எண். 45)

அருண் அடுத்த மாதம் ஓட்டப்போட்டியில் கலந்துகொள்ள வேண்டும். அதனால் ஒவ்வொரு நாளும் மாலையில் பயிற்சி மேற்கொண்டான். அன்றும் வழக்கம்போல, விளையாட்டுத் திடலில் ஓடிக்கொண்டு இருந்தான். அப்போது அங்கு தமிழ்வாணன் வந்தான். அவன், அருண் ஓடும் பாதையில் வாழைப்பழத் தோலை வீசினான். அப்போது அங்கு வந்த பயிற்சியாளர் வாழைப்பழத் தோலை எடுத்து குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு, தமிழ்வாணனிடம் சென்று கண்டித்தார். போட்டியாளர்களிடையே வெற்றி

பெறுவதற்கான வேகமும் தன்னம்பிக்கையும் இருக்க வேண்டுமே தவிர, பொறாமை இருக்கக் கூடாது. அது உன்னை அழித்து விடும் என்று அறிவுரை வழங்கினார். அதைக் கேட்ட தமிழ்வாணன் பயிற்றுநரிடம் மன்னிப்பு வேண்டினான். அருணை சக போட்டியாளராக நினைத்து, பயிற்சி மேற்கொண்டான்.

## 20.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் தொடர்கள் வரிசை மாற்றப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தி உரைப்பகுதியாக மாற்றுக.**

1. குழந்தை ஒன்று தெருவில் தளர்நடை போட்டு நடந்து வந்தது.
2. அப்போது குதிரை வண்டி ஒன்று தெருவில் வந்துகொண்டிருந்தது.
3. குழந்தையின் அருகில், குதிரை வண்டி புயல்போல் நெருங்கியது.
4. அதனைக் கண்டவர்கள் குழந்தைக்கு என்ன ஆகுமோ என்று அஞ்சினர்.
5. சாலையோரம் நடந்து கொண்டிருந்த சிறுவன் அதனைக் கண்டான்.
6. சிறுவன் தன் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் சட்டெனப் பாய்ந்து குழந்தையைத் தூக்கினான்.
7. குதிரை வண்டி அவனைக் கடந்து போயிற்று.
8. குழந்தையைக் காப்பாற்றிய அவனை அனைவரும் பாராட்டினர்.
9. அந்தச் சிறுவனுக்கு அப்போது ஏழுவயதுதான். அவன் பெயர் நரேந்திரன்.
10. அந்த நரேந்திரன்தான் பிற்காலத்தில் சுவாமி விவேகானந்தர் என்று அழைக்கப்பட்டவர் ஆவார்.

# பாடம் – 24

## 24.2 படிப்போம்

### பயிற்சிகள்

#### அ) விடை காண்போம் (ப.எண்.80)

1. அனுமதியற்ற இருக்கையில் அமர்ந்ததாகக் கூறி, காவலர்கள் அந்தப் பெண்மணியைக் கைது செய்தனர்.
2. மார்ட்டின் லூதர் கிங்கிற்கு அவருடைய பெற்றோர்கள், எதிரியையும் நேசிக்க வேண்டும் ; எவரையும் வெறுக்கக் கூடாது ; எந்த உயிருக்கும் துன்பம் தரக்கூடாது ஆகிய அறக்கருத்துகளை அறிவுரைகளாக வழங்கினர்.
3. வன்முறை சிறந்த வழியன்று. இந்திய நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்ட அண்ணல் காந்தியடிகளின் அமைதிப் போராட்டங்களால் ஈர்க்கப்பட்டவர் மார்ட்டின் லூதர் கிங். எனவே, அவர் அமைதிவழியில் போராட முடிவு செய்தார்.
4. பேருந்து புறக்கணிப்புப் போராட்டம் 381 நாள் நடைபெற்றது.
5. மார்ட்டின் லூதர் கிங் உரிமைகள் மறுக்கப்படும் இடங்களில் அமைதிவழியில் போராடினார். வெற்றியும்பெற்றார். மேலும் அவர் தாம் ஏற்றுக்கொண்ட கொள்கையில் உறுதியாக நின்றார். அதனால் உலக அமைதிக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது.

#### ஆ) பின்வரும் தொடர்கள் விடையாக வருமாறு, வினாக்கள் – விடைகள் உருவாக்குக. (ப.எண்.80)

1. மார்ட்டின் லூதர் கிங் எந்த நாட்டைச் சேர்ந்தவர் ?
2. யாருக்கு பேருந்தில் அமரும் உரிமை கிடைத்தது ?

#### இ) கோடிட்ட இடத்தைப் பொருத்தமான சொல்லை இட்டு நிரப்புக. (ப.எண்.80)

1. பேருந்து
2. அன்பு
3. சிறந்த
4. உரிமை
5. நோபல்

## 24.3 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

அ) கோடிட்ட இடத்தில் சரியான உவமைத் தொடரைத் தேர்ந்தெடுத்து நிரப்புக. (ப.எண்.82)

1. குன்றிலிட்ட விளக்குபோல
2. கண்ணைக்கட்டி காட்டில் விட்டாற்போல
3. அத்தி பூத்தாற்போல
4. மடை திறந்த வெள்ளம்போலத்
5. உள்ளங்கை நெல்லிக்கனிபோலத்

ஆ) உவமைத் தொடரையும் பொருளையும் பொருத்துக. (ப.எண்.82)

| | உவமைத்தொடர் | – | பொருள் |
|---|---|---|---|
| 1. | உள்ளங்கை நெல்லிக்கனிபோல | – | தெளிவு |
| 2. | அத்தி பூத்தாற்போல | – | அரிது |
| 3. | குன்றிலிட்ட விளக்குபோல | – | பரவுதல் |
| 4. | கண்ணைக்கட்டி காட்டில் விட்டாற்போல | – | தனிமை |
| 5. | மடை திறந்த வெள்ளம்போல | – | தங்குதடையின்மை |

இ) உரையாடலைப் பொருத்தமான உவமைத்தொடர்களால் நிறைவு செய்க. (ப.எண்.82)

1. அத்தி பூத்தாற்போல
2. உள்ளங்கை நெல்லிக்கனிபோல

## 24.4 மொழியோடு விளையாடுவோம்

வா, போ, நீ, ஆ என வருவனவெல்லாம் ஓரெழுத்து ஒருமொழி. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் படித்து, ஓரெழுத்து ஒருமொழியால் கட்டத்தை நிரப்புக. (ப.எண்.83)

1. ஈ
2. கை
3. வா
4. போ
5. ஆ

6. ஓ
7. தீ
8. தா
9. தை
10. கூ

## கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (ப.எண்.84)

1. தருமன்
2. 3
3. தோண்டிய குழியில் மரக்கன்றை வைக்கும் வேலை இரண்டாம் நபருக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டது.
4. தவறு. கொடுத்த வேலையை எதற்காகச் செய்கிறோம் என்பதை அறியாமல் கடமைக்கு செய்தது.
5. இக்கதையின் மூலம் கடமைக்கு வேலை செய்யக்கூடாது என்பதைப் புரிந்துகொண்டேன்

## 24.7 செந்தமிழ்ச்செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 85)

1. **அடக்கம்**
   பெரியோர் முன் சிறியோர் **அடக்கமாக** இருக்க வேண்டும்.
2. **அமைதி**
   **அமைதி**க்காக நோபல் பரிசு வழங்கப்படுகிறது.
3. **வீரம்**
   பழந்தமிழர் **வீரம்** மிக்கவர்களாக இருந்தனர்.
4. **உயர்வு**
   சிறப்பாக பணியாற்றுபவர்கள் பதவி **உயர்வு** பெறுகின்றனர்.

## 24.8 மொழிபெயர்ப்போம் (பக்க எண். 85)

வன்முறை சிறந்த வழியன்று; எதிரியையும் நேசிக்க வேண்டும்; எவரையும் வெறுக்கக் கூடாது; எந்த உயிருக்கும் துன்பம் தரக்கூடாது.

Violence is not the best way; one should love one's enemy; one should not hate anyone; one should not cause suffering to any living being.

## 24.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**எதிர்ச்சொற்களைக் கொண்டு பின்வருமாறு தொடர்கள் உருவாக்குக. (பக்க எண். 85)**

காலையில் படி மாலையில் ஆடு

இன்சொல் பேசு வன்சொல் தவிர்

நன்மை செய் தீமை விலக்கு

சிறு துளி பெரு வெள்ளம்

இளமையில் சோம்பல் முதுமையில் வறுமை

மேடு பள்ளம் பார்த்து சாலையில் செல்

போருக்கு எதிரானது அமைதி

சூரியன் கிழக்கே உதிர்த்து மேற்கே மறையும்

## 24.11 உயர்நிலைத்திறன்

**பின்வரும் குறிப்புச் சொற்களைக்கொண்டு உரைப்பகுதி உருவாக்குக.**

தொலைக்காட்சியை கண்டுபிடித்தவர் ஜான் லோகி பைர்டு. இத்தொலைக்காட்சி தற்போது சிறந்த பொழுதுபோக்குக் கருவியாகப் பயன்பட்டு வருகிறது. இது கண்ணுக்கு ஒளிக்காட்சியாகவும் காதுக்கு ஒலியாகவும் என ஒளி–ஒலிக் காட்சிகள் காண்பிப்பதால் அனைவரும் இதனை விரும்பியே பார்க்கின்றனர். இதனால் நன்மைகள் ஏற்பட்டாலும் சில தீமைகளும் ஏற்படதான் செய்கிறது. தொலைக்காட்சியில் திரைப்படக் காட்சிகள், விளம்பரங்கள், அறிவிப்புகள், கல்வி நிகழ்ச்சிகள் முதலானவை ஒளிபரப்பப்படுவதால் பொழுதுபோக்குக்காகவும், அறிவை பெருக்குவதற்காகவும் பயன்படுவது நன்மையாகும். இதனை அதிகம் பார்ப்பதால் பார்வைக் குறைபாடு, படிப்பில் ஆர்வம் குறைவு முதலான தீமைகள் ஏற்படுகிறது. எனவே, தொலைக்காட்சியை தேவைக்கேற்றவாறு பயன்படுத்தி நன்மையை பெற வேண்டும்.

# மீள்பார்வை

## பயிற்சிகள்

**1. கீழ்க்காணும் தொடர்களுக்குப் பொருத்தமான விடைகளைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக. (ப.எண். 87)**

1. தொல்காப்பியர்
2. இரட்டுற மொழிதல்
3. செயலி
4. சிபி
5. தக்களி

**2. கீழ்க்காணும் தொடர்கள் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக. (ப.எண்.87)**

1. தவறு
2. தவறு
3. சரி
4. தவறு
5. தவறு

**3, கீழ்க்காணும் சொற்களை அவற்றின் பொருளோடு பொருத்துக. (ப.எண்.87)**

1. பாகுபாடு – பிரிவு
2. கொள்கை – குறிக்கோள்
3. தஞ்சம் – அடைக்கலம்
4. தொன்மை – பழைமை
5. சிந்தனை – எண்ணம்

**4. கீழ்க்காணும் தொடர்களுக்கு பொருத்தமான சொற்களைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக. (ப.எண்.88)**

1. மரக்கன்றுகளை
2. வெளுத்து வாங்கினாள்
3. பாடிய
4. அழகாக
5. வழங்கினார்

**5. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு சொல்லில் விடை எழுதுக. (ப.எண்.88)**

1. மரியா மிட்செல்
2. திருவள்ளூர்
3. திருவாரூர்
4. ஓரிகாமி
5. அகிம்சை

**6. கீழ்க்காணும் திருக்குறளில் விடுபட்ட சொற்களை நிரப்புக. (ப.எண்.88)**

1. மலர்நீட்டம்
2. இன்பம்
3. பொய்யற்க
4. செய்வார்
5. இழுக்கு

**7. பின்வரும் பழமொழிகளைப் பொருத்துக, (ப.எண்.89)**

| | | |
|---|---|---|
| 1. ஊருடன் | – | ஒத்துவாழ் |
| 2. சிறுதுரும்பும் | – | பல் குத்த உதவும் |
| 3. சுடர் விளக்காயினும் | – | தூண்டுகோல் வேண்டும் |
| 4. நிறைகுடம் தளும்பாது | – | குறைகுடம் கூத்தாடும் |
| 5. பொறுத்தார் | – | பூமி ஆள்வார் |

**8. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக. (ப.எண்.89)**

| | | |
|---|---|---|
| 1. Programme | – | நிரல் |
| 2. Rights | – | உரிமை |
| 3. Space | – | விண்வெளி |
| 4. Excavation | – | அகழாய்வு |
| 5. Chopstick | – | சாப்ஸ்டிக் (இரு குச்சிகளைக் கொண்ட ஒரு கருவி) |

**9. கீழ்க்காணும் மரபுத்தொடர்களை அவற்றின் பொருளோடு பொருத்துக. (ப.எண்.89)**

| | | |
|---|---|---|
| 1. ஆறப்போடுதல் | – | காலம் தாழ்த்துதல் |
| 2. பூசி மெழுகுதல் | – | மறைத்தல் |
| 3. வெளுத்து வாங்குதல் | – | மிக நன்றாகச் செய்தல் |

**10. கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையை எழுதுக. (ப.எண்.89)**

1. கீழடி
2. சுமோ (sumo)
3. கல்பனா சாவ்லா
4. –
5. மார்ட்டின் லூதர் கிங்

**11. பின்வரும் விடுகதைகளுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (ப.எண்.89)**

1. நிழல்
2. தண்ணீர்
3. கரும்பு
4. வெண்டைக்காய்
5. தராசு

**12. பின்வரும் தொடர்களில் கோடிட்ட இடங்களைப் பொருத்தமான மரபுத்தொடர் கொண்டு நிரப்புக. (ப.எண்.90)**

1. பூசி மெழுகினாள்
2. வெளுத்து வாங்கினாள்
3. ஆறப்போட்டனர்

**13. பின்வரும் விளம்பர அட்டையைப் பார்த்துக் கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.90)**

1. பேச்சுப்போட்டி தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் 16.08.2023 புதன்கிழமை அன்று காலை 11.30 மணிக்கு நடைபெறுகிறது.
2. தமிழன் என்று சொல்லடா !

   தலை நிமிர்ந்து நில்லடா !
3. 18 முதல் 25 வரை
4. தமிழ் இணையக் கல்விக்கழகம் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை இணைந்து பேச்சுப்போட்டியை நடத்துகிறது.
5. ₹15.000/–

**14. பின்வரும் விளம்பர அட்டையைப் பார்த்துக் கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.90)**

1. தமிழரின் பழந்தமிழ் இலக்கண நூலாகத் தொல்காப்பியம் விளங்குகிறது.

   Tolkappiyam is the oldest Tamil grammar book of Tamils.

2. இன்றைய சூழலில் கற்றல் நோக்கங்களுக்கு இணையம் பெரிதும் உதவுகிறது.

   The internet greatly assists learning objectives in today's environment.

3. ஜப்பானியர்களின் உணவில் அரிசி, மீன், பச்சைக் காய்கறிகள் ஆகியவை முதன்மை இடத்தைப் பெறுகின்றன.

   Rice, fish, and green vegetables occupy a primary place in the Japanese diet.

4. விண்வெளிக்குப் பயணம் செய்த முதல் இந்தியப் பெண்மணி கல்பனா சாவ்லா.

   Kalpana Chawla was the first Indian woman to travel to space.

5. தமிழர்களின் தொன்மையைக் கீழடி அகழாய்வுகள் நமக்கு உணர்த்துகின்றன.

   The excavations at Keezhadi reveal to us the antiquity of the Tamils.

# பாடம் – 25

## 25.2 படிப்போம்

### பயிற்சிகள்

**அ) விடை காண்போம். (ப.எண்.94)**

1. வேம்பு
2. துளசி
3. விஷக்கடிகளுக்கு மருந்தாகப் பயன்படுகிறது. மனிதர்களின் சிறுநீரகத்தில் ஏற்படும் கல்லைப் போக்குகிறது
4. ஆவாரம்பூ நீரிழிவு (டயாபடிஸ்) நோய்க்கு அருமருந்தாகப் பயன்படுகிறது. புற்றுநோய்க்கு எதிரான ஆற்றலைக் கொண்டுள்ளது.
5. நிலவேம்பு

**ஆ) சரியா ? தவறா ? கண்டறிக. (ப.எண்.94)**

1. தவறு
2. சரி
3. சரி
4. தவறு
5. சரி

## 25.2 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

**அ) பொருத்துக (ப.எண்.96)**

1. மாடு வந்தார் – மாடு வந்தது
2. நான் வந்தாய் – நான் வந்தேன்
3. நாளை வந்தேன் – நாளை வருவேன்
4. எழிலன் படித்தாள் – எழிலன் படித்தான்
5. மயில் கத்தியது – மயில் அகவியது

**ஆ) பொருத்தமான சொல்லை எழுதி, உரைப்பகுதியை நிறைவு செய்க. (ப.எண்.96)**

1. ஓடியது
2. பார்த்தான்
3. மகிழ்ந்தான்
4. கூவியது

## 25.4 மொழியோடு விளையாடுவோம்

**குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டத்தை நிரப்புக. கட்டத்திலுள்ள வட்டத்தில் சிக்கிய எழுத்துகளை ஒன்றுபடுத்திப் பழமொழியைக் கண்டறிக. (ப.எண்.97)**

1. உழைப்பு
2. கப்பல்
3. பேராசை
4. உயர்வு

பழமொழி : உழைப்பே உயர்வு

## 25.5 கேட்டல் கருத்தறிதல்

**வினாக்கள் – விடைகள் (ப.எண்.98)**

1. தலைவர் எறும்பு
2. மழைக்காலம் முடிந்து கோடைக்காலம் தொடங்கிவிட்டது. உணவும் தீர்ந்துவிட்டது. எனவே எறும்புகள் உணவைச் சேகரிக்க புறப்பட்டன
3. ஓர் எறும்பு "இப்போதுதானே கோடைக்காலம் தொடங்கியுள்ளது. சில நாள் கழித்துச் சென்றால் என்ன ? " என்று உணவுத் தேடச் செல்லவில்லை
4. செய்யும் செயலை உரிய காலத்தில் செய்ய வேண்டும். இல்லையெனில் அதனால் பாதிப்பு தான் ஏற்படும்
5. Activity based

## 25.7 செந்தமிழ்ச்செல்வம்

**சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 99)**

1. தாவரம்

   விலங்குகளுக்கு **தாவரம்** உணவாகப் பயன்படுகிறது.

2. காற்று

   உயிர் வாழ தேவை **காற்று**.

3. செடிகொடிகள்

   காற்றில் **செடிகொடிகள்** அசைந்தன.

4. பாகங்கள்

   வாழைமரத்தின் அனைத்துப் **பாகங்கள்** உணவாகப் பயன்படுகிறது.

## 25.8 மொழிபெயர்ப்போம் (பக்க எண். 99)

இயற்கை உணவு முறைகளையும் இயற்கையோடு இயைந்த பழக்கவழக்கங்களையும் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் உடல்நலத்தையும் உளநலத்தையும் பாதுகாக்க முடியும்.

We should adopt natural diets and practices that are in harmony with nature. Doing so will help us protect our health and mental well–being.

## 25.10 படைப்பாற்றல் வளர்ப்போம் (பக்க எண். 100)

### படங்களைப் பார்த்து கதை உருவாக்கிக் கூறுக.

நண்பர்கள் இருவர் சாலையில் நடந்து சென்றனர். அப்பொழுது சாலையில் ஒரு பணப்பை கிடந்தது. இருவரும் அதைப் பார்த்தனர். அச்சாலையில் யாரும் இல்லாத காரணத்தால் பணப்பையை எடுத்து திறந்து பார்த்தனர். அதில் பணம் இருந்தது. அப்பணத்தை இருவரும் பங்கிட்டுக் கொள்ள திட்டமிட்டு, பணத்தை எண்ணினர். அதை சரிபாதி பிரிப்பதில் இருவருக்கும் சண்டை ஏற்பட்டது. இருவரும் சண்டையிட்டுக் கொண்டிருந்ததை அந்த வழியில் வந்து கொண்டிருந்த காவலர் பார்த்தார். இருவரையும் விசாரித்ததில் சாலையில் கிடந்த பணப்பையை எடுத்து அதில் உள்ள பணத்தைப் பிரிப்பதில் சண்டை வந்தது என்று கூறினர். அக்காவலர், "சாலையில் கிடந்த பணப்பையை எடுத்து, காவல் நிலையத்தில் ஒப்படைக்காமல், பணப்பையில் உள்ள பணத்தை எடுத்ததே மிகப் பெரிய தவறு. அதுவுமில்லாமல் இருவரும் சண்டை போட்டுக் கொண்டுள்ளீர்களா" என்று கூறி, இருவரையும் காவலர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்.

# பாடம் – 26

## 26.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம், (ப.எண்.105)

1. சைலேந்திரர்
2. முழு உடல் வளர்ச்சி பெற உடற்பயிற்சி செய்யவேண்டும்
3. –
4. கவிமணி "உடலில் உறுதி உடையவரே ! உலகில் இன்பம் உடையவராம்" எனப் பாடியுள்ளார்.
5. உடற்பயிற்சி செய்யும்போது உடலுறுப்புகள், ஒழுங்கான முறையில் ஒரே அளவில் இயங்குகின்றன. அப்போது அதிகமான காற்று உள்ளே செல்கிறது. அது, நுரையீரலை நிரப்புகிறது. நுரையீரல் தேவையான காற்றை உள்ளே எடுத்துக்கொண்டு, வேண்டாத காற்றை வெளியே அனுப்புகிறது. நுரையீரல் தன் பணியைச் சீராகச் செய்கிறது. உயிரைக் காக்க சுவாசம் முதன்மையானது. அதன் முழுப்பயனைப் பெற உடற்பயிற்சி உதவுகிறது. உடற்பயிற்சி உடலை மட்டும் மேம்படுத்துவதில்லை. அது மனத்தையும் மேம்படுத்துகிறது.

### ஆ) உரிய சொல்லைக் கொண்டு கோடிட்ட இடத்தை நிரப்புக. (ப.எண்.105)

1. மனம்
2. உடற்பயிற்சி
3. நுரையீரல்
4. விளையாட்டு
5. துரோணாச்சாரியா

### இ) பின்வரும் வினாக்கள் – விடைகள் சரியா தவறா எனக் குறிப்பிடுக. (ப.எண்.105)

1. தவறு
2. சரி
3. சரி
4. சரி
5. தவறு

## 26.3 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

### அ) கொடுக்கப்பட்டுள்ள முதல் தொடரின் கருத்தைப் புரிந்துகொண்டு, பொருள்மாறாமல் அடுத்துவரும் தொடரை நிரப்புக (ப.எண்.107)

1. பிடிக்கும்
2. பல வண்ண மலர்கள்
3. கட்டுரைப் போட்டியில் முன்னேறியிருக்கலாம்
4. ஆசிரியர் பாடம் நடத்தினார்

### ஆ) கருத்து மாறாத தொடர்களை இணைத்துக்காட்டுக. (ப.எண்.107)

| | | |
|---|---|---|
| 1. | நான் உண்ணும் உணவு வகைகள் சத்து நிறைந்தவை. | நான் சத்து நிறைந்த உணவுகளையே உண்பேன் |
| 2. | என் பாட்டி ஆர்வமூட்டும் விளையாட்டுகளைக் கற்றுத் தருவார். | என் பாட்டி கற்றுக் கொடுக்கும் விளையாட்டுகள் அனைத்தும் ஆர்வமூட்டக் கூடியவை |
| 3. | இசையைக் கேட்டால் மனத்திற்கு அமைதி கிடைக்கும் | மன அமைதிக்கு இசையைக் கேட்கவேண்டும். |
| 4. | போதிய பயிற்சிகளைச் செய்தால் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறலாம். | விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற போதிய பயிற்சிகளைச் செய்தல் வேண்டும். |

### இ) பின்வரும் தொடர்களுக்குக் கருத்து மாறாத்தொடர் உருவாக்கு (ப.எண்.107)

1. செய்தியாளர்கள் நேர்காணல் செய்ய மாறன் தொடர் ஓட்டப் போட்டியில் வெற்றிப் பெறுதல் வேண்டும்.
2. விடுமுறை நாள்களில் என் தாத்தா வீட்டிற்குச் சென்றால் நான் மகிழ்ச்சியாக இருப்பேன்.
3. கவின் மிகுந்த மகிழ்ச்சியை அடைய படம் வரைய வேண்டும்.

## 26.4 மொழியோடு விளையாடுவோம்

### ஒரே வண்ணக் கட்டங்களில் உள்ள சொற்களை இணைத்து சொற்றொடர் உருவாக்குக. (ப.எண்.108)

1. பழுத்த பழங்கள்
2. வெள்ளி மோதிரம்
3. வாழ்த்துப்பாடல்
4. தண்ணீர் குடி
5. மாட்டு வண்டி
6. அழகிய அணில்கள்
7. கூர்மையான வாள்
8. பூமாலை
9. இனிப்பான கரும்பு
10. மணல் வீடு

## கருத்து விளக்கப்படம்

### கீழ்க்காணும் விளம்பரத்தைப் பார்த்து வினாக்களுக்கு விடையளிக்க. (ப.எண்.109)

### வினாக்கள் – விடைகள்

1. உடற்பயிற்சி
2. உடல் உறுதிபெற உடற்பயிற்சி செய்ய வேண்டும்
3. முதல் மூன்று மாதத்திற்கு 50% கட்டண சலுகை வழங்கப்படுகிறது
4. ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்குத் தனித்தனிப் பயிற்சிக் கூடங்கள் மற்றும் தனித்தனிப் பயிற்சியாளர்கள் உள்ளனர்.
5. செல்வதுண்டு/ செல்வதில்லை

## 26.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (ப.எண்.109)

1. சந்தைக்கு
2. வணிகன் ஓய்வெடுத்துவிட்டு வீடு திரும்பும்போது வழியில் பணப்பை காணாமல் போனது.

3. பணப்பையைக் கண்டெடுத்த ஆசிரியர், தன் வீட்டு வாசலின்முன்பு, ஒரு பலகையைக் கட்டி, அதில் பணப்பையைத் தொலைத்தவர்கள் இங்கு வந்து பெற்றுக் கொள்ளலாம் என எழுதிவைத்தார்.
4. வணிகனை
5. நேர்மை மற்றும் மதிப்பு

## 26.7 செந்தமிழ்ச்செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 111)

1. **விளையாட்டு**

   இந்தியா **விளையாட்டு**த் துறையில் முன்னேறி வருகிறது.

2. **பதக்கங்கள்**

   இந்திய விளையாட்டு வீரர்கள் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று **பதக்கங்களை** வென்று வருகின்றனர்.

3. **தொழில்நுட்பம்**

   அறிவியல் முன்னேற்றத்தில் தகவல் **தொழில்நுட்பம்** சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது.

4. **மகிழ்ச்சி**

   நான் வகுப்பில் முதல் மாணவனாக வந்தால் என் பெற்றோர் மிகவும் **மகிழ்ச்சி** அடைந்தனர்.

## 26.8 மொழிபெயர்ப்போம் (பக்க எண். 111)

Exercise is any physical activity that we perform for relaxing our body and taking away all the mental stress.

நம் உடலை அமைதியாக்கவும், மன அழுத்தத்தை நீக்கவும் நாம் செய்யும் எந்தவொரு உடல் செயல்பாடும் உடற்பயிற்சி ஆகும்.

## 26.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

### மூன்று சொல் கொண்ட தொடரில் இடையில் வரும் சொல் ஒரு விலங்கு / பறவையின் பெயராக வரும்படி பாடலைத் தொடர்ந்து எழுதுக. (பக்க எண். 112)

அழகிய மயிலைக் கண்டேனே!

ஆடிப்பாடி மகிழ்ந்தேனே!

துள்ளும் மானைக் கண்டேனே!
துள்ளிப் பிடிக்கச் சென்றேனே!

பாடும் குயிலைக் கண்டேனே!
பாட்டுக் கேட்டு மகிழ்ந்தேனே!

ஓடும் முயலைக் கண்டேனே!
ஓடிப் பிடிக்க முனைந்தேனே!

அசைந்தாடும் யானையைக் கண்டேனே!
அசையும் அழகை ரசித்தேனே!

கொஞ்சும் கிளியைக் கண்டேனே!
கொஞ்சிப் பேசி மகிழ்ந்தேனே!

## 26.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்துச் சுருக்கி எழுதுக. (பக்க எண். 113)**

ஒவ்வொருவரும் அரும்பாடுபட்டு ஈட்டும் பொருளில் சிறுபகுதியை சேமித்தால், சிறுதுளி பெருவெள்ளம் என்பதற்கேற்ப பல்கிப் பெருகி, பிற்கால வாழ்வுக்கு உதவும். இப்பழமொழி பொருளைச் சேர்ப்பதற்காக மட்டுமல்லாமல் உழைப்பிற்கும் கல்விக்கும் பொருந்தும். நாள்தோறும் சிறுக சிறுக கற்றால் அறிவு வளர்ந்து ஓங்கும்.

# பாடம் – 27

## 27.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம். (ப.எண்.116)

1. அயோத்திதாசர்
2. காத்தவராயன்
3. அயோத்திதாசர், தன் ஆசிரியர் மீது கொண்ட அன்பினால் தம் பெயரை அயோத்திதாசர் என மாற்றிக்கொண்டார்.
4. அயோத்திதாசர், உரிமை மறுக்கப்பட்ட மக்களுக்காகப் பாடுபட்டார்.
5. உரிமை மறுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்குக் கல்வியும் பொருளாதாரமும் அடிப்படையானவை என உணர்ந்ததனால், அவர்களுக்கு சென்னையில் 'ஆல்காட் பஞ்சமர்' என்ற பெயரில் பள்ளிகளைத் தொடங்கினார்.

### ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (ப.எண்.116)

1. உரிமை
2. ஆல்காட் பஞ்சமர்
3. காத்தவராயன்
4. ஒரு பைசாத் தமிழன்
5. புதன்கிழமை

### இ) பின்வரும் தொடருக்குப் பொருந்தாத கூற்றைக் குறிப்பிடுக (ப.எண்.116)

1. மக்கள் பற்று இல்லாதவர்
2. மொழிபெயர்ப்பாளர்
3. பதவி ஆசை உடையவர்

## 27.3 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் தொடர்களுள் வழாநிலைத் தொடர்களைக் கண்டறிந்து (✓ ) குறிப்பிடுக. (ப.எண்.118)

1. ✓
2. X

3. ✓
4. X
5. ✓

### ஆ) கீழ்க்காணும் தொடர்களைப் பிழையின்றி எழுதுக. (ப.எண்.118)

1. வசந்தா படித்தாள்
2. கமலி பாடினாள்
3. நீ சென்றாய்
4. அவள் வந்தாளா ?
5. நாள் குரைக்கும்

### இ) கீழ்க்காணும் உரைப்பகுதியில் பிழையாக உள்ள தொடர்களை எடுத்து எழுதுக (ப.எண்.118)

1. இலச்சுமி கூப்பிடுகிறாள் – இலச்சுமி கத்துகிறது
2. இதோ சென்றுவிட்டேன் – இதோ செல்கிறேன்

## 27.4 மொழியோடு விளையாடுவோம்

### கீழ்க்காணும் விடுகதைகளுக்கும் பழமொழிகளுக்கும் பொருந்தும் ஒரு சொல்லைக் கண்டறிந்து நிரப்புக (ப.எண்.119)

1. தண்ணீர், தண்ணீர்
2. குதிரை, குதிரை
3. தவளை, தவளை
4. மரம், மரம்
5. மணி, மணி

## 27.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (ப.எண்.119)

1. மாணிக்கம், தம் நிலத்தில் தென்னங்கன்றுகளை நட முடிவு செய்தார்.
2. மாணிக்கம் வேலையை கபிலன் என்பவரிடம் ஒப்படைத்தார்
3. முதல் நாள் கபிலன் 20 தென்னங்கன்று நட்டார்.
4. ஒரு தென்னங்கன்று நடுவதற்கு கூலியாக ரூ.500 கொடுக்கப்பட்டது
5. மண்வெட்டியின் முனை மழுங்கிவிட்டது. எனவே கபிலனால் குழி தோண்ட முடியவில்லை.

## 27.7 செந்தமிழ்ச்செல்வம்

**சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 121)**

1. **ஆசிரியர்**

   தமிழ் ஆசிரியர் சிறப்பாக பாடம் நடத்தினார்.

2. **அன்பு**

   நான் என் தங்கையின் மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளேன்.

3. **முன்னேற்றம்**

   கடுமையாக உழைத்தால் வாழ்வில் **முன்னேற்றம்** பெறலாம்.

4. **வார இதழ்**

   வாரந்தோறும் வெளியாகும் இதழ் **வார இதழ்** ஆகும்.

## 27.8 மொழிபெயர்ப்போம் (பக்க எண். 121)

உலக மக்கள் அனைவரையும் சமமாகக் கருதி, அன்பு காட்ட வேண்டும். பிறருக்கு ஏற்படும் பசி போன்ற துன்பங்களைப் போக்க முயற்சி செய்தல் வேண்டும்.

We should treat all people in the world equally and show love. We should try to alleviate suffering such as hunger that others experience.

## 27.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் இணைப்புச்சொற்களுள் பொருத்தமானவற்றைக் கொண்டு உரையாடல் ஒன்று உருவாக்குக. (பக்க எண். 122)**

நகுல் : முகிலா நேற்று ஏன் விளையாட வரவில்லை?

முகுல் : **ஏனெனில்** என் வீட்டிற்கு உறவினர் வந்திருந்தனர்.

நகுல் : அடுத்த வாரம் நமக்கு அரை இறுதிப் போட்டி உள்ளது. மறந்துவிட்டாயா?

முகுல் : மறக்கவில்லை, நகுல். **ஆனாலும்** இன்றும் என்னால் விளையாட முடியாது.

நகுல் : என்ன இப்படிச் சொல்கிறாய்? நீ சிறப்பாக விளையாடுகிறாய் என்று ஆசிரியர் கூறினாரே. **ஆதலால்** நீ கட்டாயம் வரவேண்டும்.

முகுல் : இன்று என் தங்கைக்கு உடம்பு சரியில்லை. **எனவே**, அம்மாவுடன் மருத்துவமனை செல்கிறேன்.

நகுல் : அப்படியா! அப்பா மருத்துவமனைக்கு வரவில்லையா?

முகுல் : இல்லை. அப்பா அலுவலக வேலையாகச் சென்றுள்ளார். **ஆகையால்** அம்மாகூட நான் மருத்துவ மனைக்கு செல்ல வேண்டியுள்ளது.

நகுல் : சரி. நாளை விளையாட வருவாயா?

முகுல் : வருவேன். **ஆனால்** சீக்கிரம் சென்றுவிடுவேன்.

நகுல் : ஏன் சீக்கிரம் செல்வாய்?

முகுல் : தேர்வு வருகிறது இல்லையா? **ஆகவே**, படிப்பதற்காக சீக்கிரம் செல்ல வேண்டும்.

நகுல் : தேர்வுக்கு இன்னும் ஒரு மாதம் உள்ளதே.

முகுல் : ஆமாம். ஒரு மாதம் உள்ளதுதான். **இருப்பினும்** அன்றைய பாடங்களைப் படிக்க வேண்டுமே.

நகுல் : ஆமாம். நானும் மறந்துவிட்டேன். **அப்படியெனில்** இருவரும் சேர்ந்தே படிக்கலாம்.

முகுல் : சரி. காலை **அல்லது** மாலையில் நேரம் ஒதுக்கிக் கொண்டு இருவரும் படிக்கலாம்.

நகுல் : **ஆயினும்** முகுல் நீ எனக்கு முன்னாடியே சொல்லியிருக்கலாம்.

முகுல் : பரவாயில்லை நகுல். இனி, படிப்புக்கும் விளையாட்டுக்கும் முறையாக நேரம் ஒதுக்குவோம். **அதனால்** இரண்டிலும் வெற்றி பெறலாம்.

நகுல் : சரி முகுல். நாளை பார்க்கலாம்.

முகுல் : சரி நகுல்.

## 20.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் படங்களுள் ஏதேனும் ஒன்றைத் தேர்வுசெய்து அதற்குப் பொருத்தமான உரையாடல் எழுதுக. (பக்க எண். 122)**



காவலர் : தம்பி. வண்டியை நிறுத்து.

சிறுவன் : எதற்காக ஐயா?

காவலர் : ஓட்டுநர் உரிமம் இருக்கா?

சிறுவன் : இல்லை ஐயா.

காவலர் : ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வண்டி ஓட்டக்கூடாது. அது தெரியுமா, தெரியாதா?

சிறுவன் : தெரியும். ஆனால் எனக்கு 17 வயதுதான் ஆகிறது என்பதால் ஓட்டுநர் உரிமம் பெறவில்லை.

காவலர் : இது அதைவிட பெரிய தவறு. சிறுவர்கள் வண்டி ஓட்டக்கூடாது.

சிறுவன் : ஐயா. தெரியாமல் ஓட்டிக் கொண்டு வந்துவிட்டேன். இனிமேல் இவ்வாறு செய்ய மாட்டேன்.

காவலர் : சரி. இனிமேல் செய்யாதே. இப்பொழுது அபராத தொகையை கட்டிவிட்டு செல்.

சிறுவன் : நன்றி ஐயா.



அகிலன் : முகிலா, இது தான் உலக அதிசயத்தில் ஒன்றான பிரமிடு.

முகிலன் : பிரமிடு அப்படியென்றால் என்ன அகிலா?

அகிலன் : இது எகிப்திய மன்னர்களால் கட்டப்பட்ட கூம்பு வடிவிலான நினைவிடங்களைப் பிரமிடு என்கிறோம்.

முகிலன் : இது ஏன் கூம்பு போல் உள்ளது.

அகிலன் : கூம்பு போல் உள்ளதால் தான் இதனை பிரமிடு என்கிறோம்.

முகிலன் : உள்ளே என்ன இருக்கும்?

அகிலன் : இது மன்னர்களின் கல்லறை ஆகும். உள்ளே அறை அறைகளாக இருக்கும்.

முகிலன் : இது மன்னர்களின் கல்லறை எனில், இங்குதான் மன்னர்களை புதைப்பார்களா?

அகிலன் : ஆமாம். அந்த காலத்தில் உள்ள மன்னர்களைப் புதைப்பதற்காகக் கட்டப்பட்டது. இது பண்டைய எகிப்தியர்களின் தொழில்நுட்பத் திறனுக்கும் கட்டடக் கலை குறித்த அறிவுக்கும் சான்றாக இருக்கிறது.

முகிலன் : உலகிலேயே பெரிய பிரமிடு எது?

அகிலன் : உலகிலேயே பிரமிடுகளில் மிகவும் பெரியது கிசா. மிகவும் பழமையான கட்டிடங்களில் ஒன்றாகவும் இது உள்ளது.

முகிலன் : இது எங்குள்ளது?

அகிலன் : எகிப்தின் தலைநகர் கெய்ரோவுக்கு அருகில், நைல் நதிக்கு 5 மைல் தொலைவில் அமைந்துள்ளது.

முகிலன் : கிசா பிரமிடுக்குள் எந்த மன்னரின் கல்லறை உள்ளது.

அகிலன் : குஃபு மன்னரின் கல்லறை இருக்கிறது. இங்கே கல்லறையுடன் ஏராளமான பொருள்களும் ஆபரணங்களும் வைக்கப்பட்டிருந்தன.

முகிலன் : அப்படியா. தேவையான தகவல்கள். நன்றி நண்பா.

அகிலன் : வா போகலாம் நண்பா.

# பாடம் – 28

## 28.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம் (ப.எண்.127)

1. சாக்ரடீஸ் நண்பரின் கத்தியைக் கையாண்டுதான் சிறப்பாகப் போரிட்டார். எனவே பரிசை நண்பருக்கு வழங்கச் சொன்னார்.
2. சாக்ரடீஸ் கிரீஸ் நாட்டின் இராணுவத்தில் பணியாற்றினார்
3. மக்களின் மனத்தில் தெளிவினை ஏற்படுத்துவதே சாக்ரடீஸின் முதன்மையான நோக்கமாகும்.
4. சாக்ரடீஸ் மீது பொய்யான குற்றம் சுமத்தப்பட்டது
5. சாக்ரடீஸ் சிறையில் இருக்கும்போது, 'ஒருவர் நமக்குத் தீமையே செய்தாலும், நம் கடமை அவருக்கு நன்மை செய்வது மட்டுமே'. ஆகவே, அரசின் உத்தரவை எதிர்த்து தப்பிச் செல்வது தவறு என்று கூறினார்.

### ஆ) பின்வரும் வினாக்கள் – விடைகள் சரியா / தவறா எனக் குறிப்பிடுக (ப.எண்.127)

1. சரி
2. தவறு
3. தவறு
4. தவறு
5. தவறு

### இ) பொருந்தாததை எடுத்து எழுதுக (ப.எண்.127)

1. (ஆ) அரசியல் ஈடுபாடு
2. (அ) உன்னையே நீ அறிவாய்

## 28.3 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

**அ) தொகைச் சொற்களைப் பிரித்து எழுதுக. (ப.எண்.130)**

1. இருசுடர் = இரண்டு + சுடர்
2. முப்பால் = மூன்று + பால்
3. மூவேந்தர் = மூன்று + வேந்தர்
4. நாற்படை = நான்கு + படை
5. ஐந்திலக்கணம்= ஐந்து + இலக்கணம்

**ஆ) படங்கள் உணர்த்தும் தொகைச்சொல்லை எழுதுக (ப.எண்.130)**

1. ஐம்பால்
2. ஐந்திணை
3. முத்தமிழ்

**இ) விடுபட்ட சொல்லைக் கண்டறிக (ப.எண்.131)**

1. சந்திரன்
2. பலா
3. தெற்கு
4. மெய்
5. புளிப்பு

## 28.4 மொழியோடு விளையாடுவோம்

**கட்டத்தில் ஒரே வண்ணமிட்ட எழுத்துகளை முறைப்படுத்தி எழுதிச் சொற்படிக்கட்டு அமைக்க (ப.எண்.132**

1. கை
2. நகை
3. அழுகை
4. புன்னகை
5. கார்த்திகை

## 28.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (ப.எண்.133)

1. துறவி ஒற்றையடிப் பாதை வழியே நடந்து சென்றார்.
2. துறவியைக் கண்ட சிறுவர்கள், 'ஐயா அந்தப்பக்கம் சென்று விடாதீர்கள். ஒரு பாம்பு அந்த வழியாகப் போவோர் வருவோரையெல்லாம் கொத்துகிறது' என்று கூறினர்.
3. "யாருக்கும் தீங்கு செய்யாதே" என்று துவி சொன்னதைக் கேட்ட பாம்பு அமைதியாக யார் கண்ணிலும் படாமல் பயந்து வாழ்ந்ததால் உடல் மெலிந்து காணப்பட்டது.
4. நான் அமைதியாக இருப்பதைப் பார்த்து, சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரும் என்னைக் கல்லால் அடித்து துன்புறுத்தினர். அதனால் உயிருக்குப் பயந்து வாழ்வதாகப் பாம்பு பரிதாபமாக கூறியது.
5. பாம்புக்குத் துறவி, "நீ யாருக்கும் தீங்கு செய்யாதே என்றுதான் கூறினேன். ஆனால், உன்னை யாராவது துன்புறுத்தும்போது, சீறக்கூடாது என்று கூறவில்லையே" என்றார்.

## 28.7 செந்தமிழ்ச்செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 135)

1. **இராணுவம்**

   உலக நாடுகளில் இந்திய **இராணுவம்** பலமிக்கதாக உள்ளது.

2. **நண்பர்கள்**

   என் **நண்பர்கள்** சுற்றுலா செல்ல திட்டமிட்டுள்ளனர்.

3. **விழிப்புணர்வு**

   மக்களிடம் பெண்கள் பாதுகாப்பு பற்றி **விழிப்புணர்வு** ஏற்படுத்த வேண்டும்.

4. **உத்தரவு**

   மக்கள் சாலை விதிகளைப் பாதுகாக்க வேண்டும் என **உத்தரவு** இடப்பட்டுள்ளது.

## 28.8 மொழிபெயர்ப்போம் (பக்க எண். 135)

சாக்ரடீஸின் கேள்வி கேட்கும்முறை, ஏதென்ஸ் நகர இளைஞர்களை மிகவும் கவர்ந்தது. இவரின் கொள்கைகளால் பிளாட்டோவும் அரிஸ்டாட்டிலும் ஈர்க்கப்பட்டனர். இவருடைய கொள்கைகளைப் பரப்பினர். பிற்காலத்தில் சிறந்த தத்துவ அறிஞர்களாகவும் விளங்கினர்.

Socrates' questioning style fascinated the youth of Athens. Plato and Aristotle were also inspired by his ideas. They spread his ideas and later became great philosophers.

## 28.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**இனிப்புக் கடையொன்று தன் பொருள்களை விற்பனை செய்ய விரும்புகிறது. அதற்கேற்ப, விலைப் பட்டியல் ஒன்றை உருவாக்கி வருக. (பக்க எண். 136)**

| அர்ச்சனா இனிப்பகம் | | | |
|---|---|---|---|
| எண்.22, கிழக்கு எல்லையம்மன் கோயில் தெரு, இரயில் நிலையம் எதிரில், கோட்டூர்புரம், சென்னை – 85. தொலைபேசி எண். +91 9876543210 ; +91 8976543210 | | | |
| விலைப்பட்டியல் | | | |
| வ. எண் | பொருள் | அளவு | விலை (ரூபாய்) |
| 1. | நெய் முறுக்கு | 1 கிலோ | 1000.00 |
| 2. | அதிரசம் | 1 கிலோ | 800.00 |
| 3. | பலா சிப்ஸ் | 1 கிலோ | 1200.00 |
| 4. | சிறுதானிய லட்டு | 1 கிலோ | 875.00 |
| 5. | போலி | 1 | 50.00 |
| 6. | கம்பு புட்டு | 1 | 75.00 |
| 7. | ராகி இனிப்பு உருண்டை | 1 கிலோ | 500.00 |

## 28.11 உயர்நிலைத்திறன்

**கொடுக்கப்பட்ட குறிப்புகளைப் பயன்படுத்தி, 'வானவில்' என்னும் தலைப்பில் உரைப்பகுதி உருவாக்குக. (பக்க எண். 137)**

### வானவில்

இயற்கை எழில் கொஞ்சும் மலையின் அடிவாரத்தின் அழகிய வயல் வரப்புகள். அவ்வயலின் மீது சூரியனின் பார்வை படாதவாறு போர்வையாய் மூடிய மேகங்கள். மழைக்காலம் என்பதை நினைவுப்படுத்தி செல்லும் மேகத் திவலைகள். மேகத்திவலைக்குள் நடுவில் கிழக்கிலும் மேற்கிலும் அழகிய வானவில் தோன்றகிறது. மழைத்துளி வழியே ஒளி பாய்ச்சும் வில். அதில் தான் ஏழு நிறம். ஏழும் அடுக்கு அடுக்குகளாய் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகம். அதைப் பார்த்த அனைவருக்கும் உள்ளம் கொள்ளைக் கொள்ளும் மகிழ்ச்சி.

# பாடம் – 29

## 29.2 படிப்போம்

### பயிற்சிகள்

### விடை காண்போம் (ப.எண்.141)

1. மனிதனை மனிதனாக வாழச்செய்யும் அன்பை, அனைத்து உயிர்களிடம் காட்டுவது மனிதேநேயம் எனப்படும்.
2. பிற உயிர்களையும் தன்னுயிர் போல் கருதுதல், பசித்த உயிர்களுக்கு உணவு அளித்தல், உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் ஆகியவை வள்ளலாரின் கொள்கைகள் ஆகும்.
3. வள்ளலார் வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினார்.
4. பசித்துன்பத்தைப் போக்கியதுடன் மக்களின் அறியாமை இருளைப் போக்கவும் வள்ளலார் அறிவுரை வழங்கினார். அதற்காக வடலூரில் சத்திய ஞான சபை ஏற்படுத்தப்பட்டது.
5. சத்திய தருமச் சாலையின் மூலம் உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஏழை, பணக்காரன், ஆண், பெண் என வேறுபாடுகள் இன்றி அனைவரின் பசியையும் போக்கினார். அன்று அவர் மூட்டிய அடுப்பின் தீ இன்றும் அணையாமல் பசித்தோர்க்கு உணவளித்து வருகிறது. இந்தத் தருமசாலையைத் தேடி வருபவர்களுக்கு 3 வேளையும் உணவு வழங்கப்படுகிறது

### ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (ப.எண்.141)

1. உயிர்க்கொலை
2. இராமலிங்க அடிகள்
3. அன்பு செலுத்துதல்
4. உள்ளம்
5. சத்திய தருமசாலை

### இ) கீழ்க்காணும் வினாக்களுக்கு சரியான விடையை எழுதுக. (ப.எண்.141)

1. அன்பு
2. வடலூர்
3. பசி

## 29.3 தெரிந்துகொள்வோம்

## பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக. (ப.எண்.144)

1. மலைவாழை = மலை + வாழை
2. கடலலை = கடல் + அலை
3. மண்ணடுப்பு = மண் + அடுப்பு
4. கற்கண்டு = கல் + கண்டு
5. வட்டமுகம் = வட்டம் + முகம்

### ஆ) கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக. (ப.எண்.144)

1. எழுத்து + அறிவு = எழுத்தறிவு
2. தீ + சுடர் = தீச்சுடர்
3. அழகு + உணர்ச்சி = அழகுணர்ச்சி
4. மேகம் + கூட்டம் = மேகக்கூட்டம்
5. பத்து + இரண்டு = பன்னிரண்டு

### இ) சேர்த்து எழுதப்பட்ட சொற்களில் புதிதாகத் தோன்றியுள்ள எழுத்தை எழுதுக. (ப.எண்.144)

1. வாழை + பழம் = வாழைப்பழம் <u>ப்</u>
2. பள்ளி + பருவம் = பள்ளிப்பருவம் <u>ப்</u>
3. இந்த + கை = இந்தக்கை <u>க்</u>
4. கை + தொழில் = கைத்தொழில் <u>த்</u>
5. தமிழ் + சங்கம் = தமிழ்ச்சங்கம் <u>ச்</u>

### ஈ) சொற்களில் திரிவதற்கு முன் இருந்த எழுத்துகளோடு பொருத்துக. (ப.எண்.144)

1. கற்சிலை = ல் – ற்
2. பொற்சிலை = ன் – ற்
3. கட்செவி = ண் – ட்
4. உட்பொருள் = ள் – ட்

## 29.4 மொழியோடு விளையாடுவோம்

### சொற்றொடர்ப் படிக்கட்டு உருவாக்குக (ப.எண்.145)

1. தொடர்வண்டி
   வண்டிச்சக்கரம்
   சக்கரவள்ளி
   வள்ளிமலை
   மலைத்தேன்

2. மலர்மாலை
   மாலை அணி
   அணி இலக்கணம்
   இலக்கணக் குறிப்பு
   குறிப்புப்பொருள்

## கருத்து விளக்கப்படம்

### கீழ்க்காணும் நூல் அறிமுகத்தினைப் படித்து, வினாக்களுக்கு விடையளிக்க.

### வினாக்கள் – விடைகள் (ப.எண்.146)

1. குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா
2. பாடல்வழியே கதை கூறுவதைக் கதைப்பாடல்கள் என்பர்
3. Story Poems
4. இன்று குழந்தைப் பாடல்கள் எழுதப் பலருக்கு வழிகாட்டியாக விளங்குகிறார்
5. 50

## 29.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (ப.எண்.147)

1. வருமுன் காப்பான் ; வரும்போது காப்பான் ; வந்தபின் காப்பான்
2. குளத்தைப் பார்வையிட்டவர்கள், நாளை வலையுடன் வந்து மீன் பிடிக்கலாம் என்று கூறிவிட்டுச் சென்றார்கள்.
3. வருமுன் காப்பான், மற்ற மீன்களிடம் நாம் இப்போதே இங்கிருந்து வேறு நீர்நிலைக்குச் சென்றுவிடுவோம் என்று கூறியது.
4. வரும்போது காப்பான் வலையில் அசையாமல் இருந்தது. அதனைக் கண்டவர்கள் அஃது இறந்துவிட்டதெனக் கருதி தரையில் தூக்கிப் போட்டனர். வரும்போது காப்போனோ மெதுவாக நழுவி, மீண்டும் குளத்தினுள் மறைந்துவிட்டது.

5. வருமுன் காப்பான் மீனின் செயல் பிடித்திருந்தது. எதையும் வருமுன்னே காப்பதே சிறந்தது. வந்தபின் அதைச் செயல்படுத்தினால், அதன் பாதிப்புகள் அதிகமாக இருக்கும்.

## 29.7 செந்தமிழ்ச்செல்வம்

**சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 149)**

1. **உணவு**

   துரித **உணவு** உடல்நலத்திற்கு கேடு விளைவிக்கும்.

2. **உள்ளம்**

   **உள்ளம்** ஒரு கோவில்.

3. **உயிர்கள்**

   **உயிர்கள்** வாழ்வதற்கு காற்று அவசியம்.

4. **சமம்**

   உயிர்கள் அனைத்தும் **சமம்.**

## 29.8 மொழிபெயர்ப்போம் (பக்க எண். 149)

Humanity refers to caring for and helping others whenever and wherever possible. It means helping others at times when they need that help the most.

மனிதநேயம் என்பது மற்றவர்களை எப்போது, எங்கு முடியுமோ அப்போது கவனித்துக்கொள்வதையும் உதவுவதையும் குறிக்கிறது. மற்றவர்களுக்கு அந்த உதவி மிகவும் தேவைப்படும் நேரங்களில் அவர்களுக்கு உதவுவதைக் குறிக்கிறது.

## 29.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கொடுக்கப்பட்ட பாதிக்கதையுடன் உம் கற்பனையை இணைத்து மீதிக் கதையைக் கூறுக. பொருத்தமான தலைப்பு ஒன்றும் தருக. (பக்க எண். 150)**

### பதறாத காரியம் சிதறாது

செல்வம் தன் தம்பியுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது, செல்வம் எறிந்த பந்து, அருகிலிருந்த குளத்தினுள் விழுந்துவிட்டது. பந்து தண்ணீரில் மிதப்பதைக் கண்டு, இருவரும் பந்தை எடுக்க முயற்சி செய்தனர். அப்போது, எதிர்பாராத வகையில், செல்வத்தின் தம்பி குளத்தினுள் விழுந்துவிட்டான். அதனைக் கண்டு அதிர்ச்சி அடைந்த

செல்வம். பதறாமல் உடனே தம்பியை காப்பாற்ற வேண்டும் என நினைத்தான். துரிதமாக அருகில் இருந்தவர்களை அழைத்து வந்தான். அவர்கள் குளத்தினுள் குதித்து செல்வத்தின் தம்பியைக் காப்பாற்றித் தூக்கிக் கொண்டு வந்தனர். அவன் சிறிதளவு தண்ணீரை மட்டும் குடித்திருந்ததால், உடனே முதலுதவி செய்தனர். குடித்திருந்த தண்ணீர் வெளியேறிவுடன் முழித்துக் கொண்டான். அனைவரும் செல்வத்தைப் பார்த்து, நீ பதற்றமடையாமல் உடனே எங்களை அழைத்ததனால் உன் தம்பியைக் காப்பாற்ற முடிந்தது எனக் கூறி பாராட்டினர். செல்வம் அனைவருக்கும் நன்றி கூறினான். தன் தம்பியை கட்டியணைத்துக் கொண்டான். செல்வமும் அவன் தம்பியும் மகிழ்ச்சியுடன் தன் வீட்டை நோக்கிச் சென்றனர்.

## 29.11 உயர்நிலைத்திறன்

**பள்ளி ஆண்டு விழாவிற்கு வருகை தர இருக்கும் சிறப்பு விருந்தினரை வரவேற்பதற்காக உரை ஒன்றனை உருவாக்குக. (பக்க எண். 150)**

**வரவேற்புரை**

நம் பள்ளியில் படித்த முன்னால் மாணவரும், இன்னாள் இந்திய ஆட்சிப் பணி அதிகாரியுமான திரு. தங்கப்பாண்டியன் இ.ஆ.ப. அவர்களை வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

கருணை இருந்தால் வள்ளல் ஆகலாம்
கடமை இருந்தால் வீரன் ஆகலாம்
பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்
மூன்றும் இருந்தால் தலைவன் ஆகலாம்

என்ற வரிக்கிணங்க,

பொதுமக்களுக்கான சேவைப் பணியில் கருணையுடன் செயல்பட்டு, கடமை ஆற்றும் ஐயா அவர்களே, தாம் படித்த பள்ளியின் விழாவில் சிறப்பு விருந்தினராக வந்திருப்பதில் பெருமைக் கொள்கிறது நம் பள்ளி.

நம் பள்ளி மாணவர்கள் ஐயா அவர்களை வழிகாட்டும் தலைவனாய் ஏற்று, வாழ்வில் முன்னேறுவதற்கான வழிமுறைகளை எடுத்துரைத்து, மாணவர்களுக்கு நல்லதோர் உரையை வழங்குமாறு அழைக்கிறோம்.

# பாடம் – 30

## 30.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம். (ப.எண்.154)

1. அன்னை தெரசா, தொழுநோயால் பாதிக்கப்பட்ட பெண்மணி ஒருவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்.
2. அன்னை தெரசா, பிறரிடம் நோயாளிகளை பாதுகாக்கவும் சிகிச்சை அளிக்கவும் இடவசதி கேட்டார்.
3. அன்னை தெரசா, தொழுநோய் பாதித்த ஒருவரைச் சுத்தம் செய்தகொண்டிருந்தார். இச்செயலைக் கண்ட அவரின் நண்பர், 'எவ்வளவு பணம் கொடுத்தாலும் இதுபோன்ற செயல்களை நான் செய்யமாட்டான்' என்று கூறினார்.
4. அன்னை தெரசா, தொழுநோயளிகள் என்று எவரும் இல்லை. தொழுநோய் என்ற வியாதி மட்டுமே இருக்கிறது. அதையும் குணப்படுத்திவிடமுடியும் என்றார். மேலும் நண்பரிடம் தெரசா 'இச்செயலைச் செய்வது மகிழ்ச்சி அளிக்கிறது' என்று கூறினார்.
5. 1962 ஆம் ஆண்டு அன்னை தெரசாவின் தொண்டுகளைப் பாராட்டி இந்திய அரசு இவருக்குப் பத்மஸ்ரீ விருது வழங்கியது. அதே ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டின் ரமோன் மகசேசே விருது, 1969ஆம் ஆண்டு சர்வதேசப் புரிந்துணர்வுக்கான ஜவஹர்லால் நேரு விருது வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 1979இல் அமைதிக்கான நோபல் பரிசும், 1980இல் இந்தியாவின் சிறந்த குடிமக்கள் விருதான பாரத ரத்னா விருதும் அன்னை தெரசாவிற்கு வழங்கப்பட்டன. இவை மட்டுமல்லாமல், அமெரிக்க ஜனாதிபதி பதக்கம், ஆர்டர் ஆஃப் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆர்டர் ஆஃப் மெரிட் உள்ளிட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட விருதுகளையும் சிறப்புகளையும் இவர் பெற்றுள்ளார்.

### ஆ) கீழ்க்காணும் தொடர்கள் யாரால் யாரிடம் கூறப்பட்டன என்பதை எழுதுக. (ப.எண்.154)

1. தெரசா தன்னார்வலர்களிடம்
2. தெரசா நண்பரிடம்

### இ) பொருத்துக. (ப.எண்.154)

| நிகழ்வு | – | ஆண்டு |
|---|---|---|
| 1. அன்னை தெரசா பிறந்த ஆண்டு | – | 1910 |
| 2. அன்னை தெரசாவிற்குப் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்ட ஆண்டு | – | 1962 |
| 3. அன்னை தெரசாவிற்கு ஜவஹர்லால் விருது வழங்கப்பட்ட ஆண்டு | – | 1969 |
| 4. அன்னை தெரசா அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்ற ஆண்டு | – | 1979 |
| 5. அன்னை தெரசாவிற்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்ட ஆண்டு | – | 1980 |

## 30.3 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு நான்கு சொல் கொண்ட தொடர்களை உருவாக்குக. (ப.எண்.156)

1. நான் பள்ளிக்குச் சென்று வந்தேன்
2. கண்ணன் பள்ளிக்குச் சென்று வந்தான்
3. மாலதி பள்ளிக்குச் சென்று வந்தாள்
4. மாணவர்கள் பள்ளிக்குச் சென்று வந்தனர்

### ஆ) கீழ்க்காணும் படத்தைப் பார்த்து நான்கு அல்லது ஐந்து சொல் கொண்ட ஐந்து தொடர் உருவாக்குக (ப.எண்.156)

1. கலா, மீனா, ரவி ஆகியோர் நண்பர்கள்.
2. விளையாடுவதற்காக இவர்கள் ரவியின் வீட்டிற்குச் சென்றனர்.
3. அவர்கள் தொலைக்காட்சியில் பெண்குயின் படத்தைப் பார்த்தனர்.
4. வீட்டில் நிறைய விளையாட்டுப் பொருள்கள் இருந்தன.
5. ரவி புத்தகத்தைப் படித்துக்கொண்டே தொலைக்காட்சிப் பார்த்தான்.

**ஆ) பறவையை அதன் கூட்டிற்கு அழைத்துச் சென்று, மூன்று சொல் கொண்ட தொடர்களை உருவாக்குக. (ப.எண்.157)**

1. மாணவர்கள் பள்ளிக்குச் சென்றனர்.
2. மீன் தண்ணீரில் நீந்தியது.
3. ஆடு புல்லை மேய்ந்தது.
4. பறவைகள் வானில் பறந்தன.

## 30.4 மொழியோடு விளையாடுவோம்

**கீழ்க்காணும் படங்களின் பெயர்களைக் கட்டத்தில் கண்டறிந்து வட்டமிடுக (ப.எண்.158)**

1. குடை
2. சட்டை
3. பட்டம்
4. குருவி
5. கடல்
6. சேவல்
7. பூட்டு
8. புலி
9. எலி
10. கிளி

## 30.5 கேட்டல் கருத்தறிதல்

**வினாக்கள் – விடைகள் (ப.எண்.159)**

1. அன்பைப் பெற்றால் அழகு வரும்.
2. ஊக்கம் வந்தால் உடைமை வரும்.
3. செல்வம் கிடைக்க கல்வியைப் பெற வேண்டும்.
4. வலிமை கிடைக்க உண்மை பெற வேண்டும்.
5. நல்லவை அனைத்தும் கிடைக்க அன்பும், ஊக்கமும், கல்வியும், உண்மையும் இருக்க வேண்டும்.

## 30.7 செந்தமிழ்ச்செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 161)

1. **அமைதி**

   காந்தியடிகள், இந்திய விடுதலைக்காக **அமைதி** வழியில் போராடினார்.

2. **ஊர்மக்கள்**

   **ஊர்மக்கள்** இணைந்து பள்ளியைக் கட்டினர்.

3. **இடவசதி**

   ஆதரவற்றோர்கள் தங்குவதற்கு **இடவசதி** செய்து தர வேண்டும்.

4. **எதிர்ப்பு**

   மாணவர்கள் **எதிர்ப்பு** தெரிவித்து, போராட்டம் நடத்தினர்.

## 30.8 மொழிபெயர்ப்போம் (பக்க எண். 161)

உலகிலேயே மனித குலத்திற்குத் தொண்டுகள் செய்ததற்காக அதிக அளவு விருது பெற்றவராக அன்னை தெரசா விளங்குகிறார். சமூகசேவை, சகிப்புத்தன்மை மூலம் இவரது புகழ் உலகம் முழுவதும் பரவியது.

Mother Teresa is the most awarded person in the world for her service to humanity. Her fame spread throughout the world through social service and tolerance.

## 30.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

### கீழ்க்காணும் படங்களைக் கொண்டு, சிறுகதை ஒன்றனை எழுதுக. (பக்க எண். 162)

**தலை கவசம்! உயிர் கவசம்!**

அசோகன் தன் தந்தையுடன் இரு சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தான். அப்பொழுது சாலையில் கல் ஒன்று கிடந்தது. அதைக் கவனிக்காமல் சென்ற அசோகனை கல் தடுக்கி விட்டது. அதனால் வண்டியிலிருந்து இருவரும் தடுமாறி கீழே விழுந்தனர்.

இதனால் இருவருக்கும் காயம் ஏற்பட்டது. தலை கவசம் அணியாமல் சென்றதால் அசோகனுக்கும், அவனுடைய தந்தைக்கும் தலையில் சற்று பெரியதாகக் காயம் ஏற்பட்டது.

இதுவே, தலை கவசம் அணிந்து சென்றால் காயம் ஏற்படுவதைத் தடுத்திருக்கலாம். தன் தவறை எண்ணி இருவரும் மனம் வருந்தினர். பின் மருத்துவமனைக்குச் சென்று காயத்திற்கு மருந்திட்டனர். பின் தலை கவசங்களை வாங்கி, பாதுகாப்பாக தலையில் அணிந்து கொண்டு வீட்டிற்குச் சென்றனர்.

வண்டியில் செல்லும் போது அனைவரும் கட்டாயம் தலை கவசம் அணிய வேண்டும். இதனால் உயிர் பாதுகாக்கப்படும். எனவே, அனைவரும் தலை கவசத்துடன் பயணம் செய்வீர். உயிர் காப்பீர்!

## 30.11 உயர்நிலைத்திறன்

**காணாமல் போன இருசக்கர வண்டியைக் கண்டுபிடித்துத் தருமாறு, காவல் கண்காணிப்பாளருக்கு ஒரு கடிதம் எழுதுக. (பக்க எண். 163)**

கடிதம்

**அனுப்புநர்**

விசாகன்

எண். 4, வேம்புலி அம்மன் தெரு

மைலாப்பூர், சென்னை – 600004.

அலைபேசி எண். 9123456789

**பெறுநர்**

உயர்திரு. காவல் கண்காணிப்பாளர் அவர்கள்

ஏ2 காவல் நிலையம்

மைலாப்பூர், சென்னை – 600004.

**ஐயா,**

**பொருள் :** காணாமல் போன இருசக்கர வண்டி – கண்டுபிடித்துத் தர கோருதல் – சார்பு.

நேற்று இரவு என் வீட்டின் வெளியில் நிறுத்தியிருந்த TN06 M 6251 என்ற பதிவுஎண் கொண்ட இருசக்கர வண்டியைக் காணவில்லை.

அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் கேட்ட பொழுது தெரியவில்லை என்று கூறிவிட்டார்கள். எனவே, என்னுடைய வண்டியைக் கண்டுபிடித்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**வண்டி விவரம்**

பதிவு எண். TN06 M 6251

வண்டி நிறம் : கருப்பு

வண்டி மாடல் : TVS Activa 125

தங்கள் உண்மையுள்ள

விசாகன்

நாள் : 30.07.2025

இடம் : சென்னை

# மீள்பார்வை

**பயிற்சிகள்**

**1) கீழ்க்காணும் தொடர்களுக்குப் பொருத்தமான விடைகளைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக. (ப.எண்.164)**

1. இன்பம்
2. அயோத்திதாசர்
3. துரோணாச்சார்யா
4. துளசி
5. இராமலிங்க அடிகள்

**2) கீழ்க்காணும் சொற்களைப் பொருத்துக. (ப.எண். 164)**

1. திருக்குறள் – தோன்றல் விகாரப் புணர்ச்சி
2. மரவேர் – கெடுதல் விகாரப் புணர்ச்சி
3. வாழைமரம் – இயல்புப் புணர்ச்சி
4. பொற்குடம் – திரிதல் விகாரப் புணர்ச்சி

**3) கீழ்க்காணும் தொடர்கள் சரியா / தவறா எனக் குறிப்பிடுக. (ப.எண். 164)**

1. சரி
2. தவறு
3. சரி
4. தவறு
5. சரி

**4) கீழ்க்காணும் வழுநிலைத் தொடர்களை வழாநிலைத் தொடர்களாக மாற்றுக. (ப.எண். 165)**

1. அப்பா வந்தார்
2. செந்தில் சென்றான்
3. மாலா விளையாடினாள்
4. புலி உறுமியது
5. மாணவர்கள் படம் வரைந்தனர்

### 5) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண். 165)

1. புணர்ச்சி இருவகைப்படும். அவை இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி.
2. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன ஐந்திணை ஆகும்.
3. தொடர்களில் திணை, பால், இடம், காலம், மரபு ஆகியவற்றில் பிழை நீக்கி எழுதுவது 'வழாநிலை' எனப்படும்.
4. துளசி
5. கவிமணி

### 6) பின்வரும் பழமொழிகளைச் சரியான சொல் கொண்டு நிரப்புக. (ப.எண். 165)

1. நொறுங்கத் **தின்றால்** நூறு வயது.
2. **தனிமரம்** தோப்பாகாது.
3. கூடி வாழ்ந்தால் **கோடி** நன்மை.
4. அன்பே **கடவுள்**.
5. உடலினை **உறுதி** செய்

### 7) பின்வரும் தொகைச் சொற்களைப் பொருத்துக. (ப.எண். 165)

1. நானிலம் – குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்
2. இருதிணை – உயர்திணை, அஃறிணை
3. மூவிடம் – தன்மை, முன்னிலை, படர்க்கை
4. அறுசுவை – இனிப்பு, கசப்பு, புளிப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு
5. ஐம்பொறி – மெய், வாய், கண், காது, மூக்கு

### 8) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக. (ப.எண்.166)

1. Diabetes – நீரிழிவு நோய்
2. Leprosy – தொழுநோய்
3. Economy – பொருளாதாரம்
4. Suffering – துன்பம்
5. Award – விருது

**9) பின்வரும் தமிழ்ச்சொற்களுக்கு இணையான ஆங்கிலச்சொற்களை எழுதுக. (ப.எண். 166)**

1. திருவிழா – Festival
2. உடற்பயிற்சி – Exercise
3. விழிப்புணர்வு – Awareness
4. தன்னார்வலர் – Volunteer
5. பசி – Hungry

**10) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண். 166)**

1. ஆவாரை, நீரிழிவு நோய்க்கு அருமருந்தாகப் பயன்படுகிறது. புற்றுநோய்க்கு எதிரான ஆற்றலைக் கொண்டுள்ளது. "ஆவாரைப் பூத்திருக்க சாவாரைக் கண்டதுண்டோ!" என்னும் பழமொழிக்கு எடுத்துக்காட்டாக மருத்துவப் பண்புகளை கொண்டு விளங்குகிறது.
2. அன்னை தெரசா பிறருக்குத் தொண்டு செய்யும் நல்ல உள்ளம் கொண்டு விளங்கினார்.
3. தொடர்களில் (திணை, பால், இடம், காலம், மரபு ஆகியவற்றில்) பிழை இருப்பது 'வழுநிலை' எனப்படும். **எ.கா.** அவள் நடந்தேன்.

   தொடர்களில் (திணை, பால், இடம், காலம், மரபு ஆகியவற்றில்) பிழை நீக்கி எழுதுவது 'வழாநிலை' எனப்படும். **எ.கா.** நிலா சிரித்தாள்.
4. ஒரு தொடரை மாற்றி எழுதினாலும் அதன் கருத்து மாறாது. இதனை கருத்து மாறாத் தொடர் என்பர்.
5. ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாக மாறும். இதனைத் திரிதல் விகாரப் புணர்ச்சி என்பர். **எ.கா.** பல் + பசை = பற்பசை ; ல் – ற் ஆக மாறியது

**11) பின்வரும் உரைப்பகுதியைப் படித்து, அதிலுள்ள வழுநிலைத்தொடர்களை, வழாநிலை தொடர்களாக மாற்றி எழுதுக. (ப.எண். 166)**

கண்ணனும் சிவாவும் நெருங்கிய நண்பர்கள். கண்ணனின் பிறந்தநாளை முன்னிட்டு, சிவா கண்ணனைத் தன் வீட்டிற்கு அழைத்து **வந்தான்**. சிவா, தன் அண்ணன் மற்றும் தங்கையுடன் தன் நண்பனையும் அழைத்துக்கொண்டு கடற்கரைக்குச் **சென்றான்**. அவர்கள் கடற்கரையில் சற்று நேரம் விளையாடிவிட்டு

அங்கிருந்து திரையரங்கம் **<u>சென்றார்கள்</u>**. திரைப்படம் பார்த்து விட்டு வெளியே வந்த **<u>அவர்கள்</u>** ஓர் உணவகத்திற்குச் சென்று உணவருந்தி, **<u>மகிழ்ந்தனர்</u>**. பின்னர் அனைவரும் வீட்டிற்குச் செல்லத் திட்டமிட்டனர். அப்பொழுது கண்ணன் சிவாவிடம் இந்தத் தினத்தை என் வாழ்வின் மிகவும் மகிழ்ச்சியான தருணமாக மாற்றியதற்கு நன்றி எனத் **<u>தெரிவித்தான்</u>**.

### 12) பின்வரும் விளம்பரத்தைப் பார்த்துக் கீழே கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக (ப.எண்.167)

**வினாக்கள் – விடைகள்**

1. சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்ட வளாகத்தில் காலை 9.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை கண்காட்சி நடைபெறுகிறது.
2. கண்காட்சி மூன்று நாள்கள் நடைபெறுகிறது.
3. கண்காட்சி தமிழகப் பண்பாட்டைப் பற்றியது.
4. கண்காட்சியில் பரத நாட்டியம், பேச்சுப்போட்டி, நாட்டுப்புறப் பாடல்கள், பறை இசை, பொய்க்கால் குதிரை போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.
5. மாணவர்கள், இளைஞர்கள், நண்பர்கள், உறவினர்கள் என அனைவரும் பங்குபெறலாம்.

### 13) பின்வரும் மூன்று சொல் கொண்ட தொடர்களை ஆறு சொல் கொண்ட தொடர்களாக மாற்றுக. (ப.எண்.168)

1. அந்த வண்ணத்துப்பூச்சி வானில் மிகவும் அழகாகப் பறந்தது.
2. பாடலைப் பாடும் சீதாவின் குரல் மிகவும் இனிமையானது.
3. மீனாவின் நண்பர்கள் அனைவரும் ஊட்டிற்குச் சுற்றுலா சென்றனர்.
4. மதுரையில் நடைபெற்ற திருவிழாவில் குமரன் பறை இசைத்தான்.
5. கடற்கரை அருகே குதிரை மிக வேகமாக ஓடியது.

### 14) பின்வரும் மூன்று சொல் கொண்ட தொடர்களை ஆறு சொல் கொண்ட தொடர்களாக மாற்றுக. (ப.எண்.169)

1. **Herbal medicine is the use of roots, stems, leaves, flowers, or seeds of plants to improve health, prevent disease, and treat illness.**

மூலிகை மருத்துவம் என்பது ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், நோயைத் தடுக்கவும், நோய்க்கு சிகிச்சையளிக்கவும் தாவரங்களின் வேர்கள், தண்டுகள், இலைகள், பூக்கள் அல்லது விதைகளைப் பயன்படுத்துவதாகும்.

2. **Exercise will help you deal with stress and reduce your risk of depression.**

   உடற்பயிற்சி மன அழுத்தத்தை சமாளிக்கவும், மனச்சோர்வின் அபாயத்தைக் குறைக்கவும் உதவும்.

3. **Socrates, ancient Greek philosopher whose way of life, character and thought exerted a profound influence on Western philosophy.**

   சாக்ரடீஸ், பண்டைய கிரேக்க தத்துவஞானி, அவரது வாழ்க்கை முறை, குணாதிசயம் மற்றும் சிந்தனை மேற்கத்திய தத்துவத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

4. **Humanity refer to the kind feelings humans often have for each other living beings.**

   மனிதநேயம் என்பது மனிதர்கள் ஒருவருக்கொருவர் வாழும் உயிரினங்கள் மீது கொண்டிருக்கும் அன்பான உணர்வுகளைக் குறிக்கிறது.

5. **Mother Teresa devoted her life to serving the poor and destitute all over the world.**

   அன்னை தெரசா உலகம் முழுவதும் உள்ள ஏழைகளுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் சேவை செய்வதற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

*******